janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 டிசம்பர் 31 - 2024 ஜனவரி 06 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 39




## ◆ ஒன்றிய அரசின் அலட்சியப் போக்கை கண்டித்து!
## ◆ பேரிடர் நிதியை முழுமையாக வழங்க வலியுறுத்தி!

# ஜனவரி 8 தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

## ★ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 99வது அமைப்பு தினம்
## ★ இரா.நல்லகண்ணு அவர்களின் 99வது பிறந்தநாள் விழா













**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 99வது அமைப்பு தின விழா, கட்சியின் மாநிலத் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் அமைப்பு தினமான 1925 டிசம்பர் 26 அன்று பிறந்தவரும், தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருது பெற்றவருமான மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களின் 99வது பிறந்த நாள் விழாவும் இணைந்து நடைபெற்றது.**

கட்சிக் கொடியை மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு எழுச்சி முழக்கங்களுடன் ஏற்றி வைத்தார்.

பின்னர், மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தலைமையுரை ஆற்றினார். அப்போது, “டிசம்பர் 3, 4 தேதிகளில் மிக்ஜாம் புயல், மழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. அதிலிருந்து மீள்வதற்குள் டிசம்பர் 18 ஆம் தேதி பெருமழையால் தூத்துக்குடி, தென்காசி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்கள் பாதிப்புக்கு உள்ளாயின. கனமழையில் தூத்துக்குடி மாவட்டம் மூழ்கியது. திருநெல்வேலி நகரம் மூழ்கியது. மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது.

### ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம்

இந்த இயற்கை பேரிடரில் இருந்து மீண்டுவர ஒன்றிய அரசும் ஒத்துழைக்க வேண்டும். அதற்குத் தேவையான நிதி உதவிகளை தமிழ்நாடு அரசுக்கு உடனடியாக வழங்க வேண்டும். பேரிடரால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மதிப்பிடப்பட்டு, 21,692 கோடி ரூபாய் தமிழ்நாட்டுக்கு தேவை என முதலமைச்சர் கோரியிருக்கிறார். டிசம்பர் 19 ஆம் தேதி டெல்லியில் பிரதமரை நேரில் சந்தித்த போது இயற்கை பேரிடரால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை முதலமைச்சர் எடுத்துரைத்துள்ளார். தேவையான உதவிகளைச் செய்வதாக பிரதமர் மோடியும் முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



கட்சிக் கடிதம்

# பேய் மழை, பெரு வெள்ளம் பாதிப்பும் ஒன்றிய அரசின் வஞ்சகமும்



போர்க்குணமிக்க தோழர்களே!

**வடகிழக்கு பருவமழை பெய்யாமல் பொய்த்து போகும் எனில் தமிழ்நாடு வறட்சியின் கோரப் பிடியில் சிக்கி தவிக்க வேண்டிய நிலை ஏற்படும். தென்மேற்கு பருவ மழை தமிழ்நாட்டிற்கு பெரிதும் பயன்படாது. குறைந்த அளவே பெய்யும். வடகிழக்கு பருவமழை தான் தமிழ்நாட்டின் குடிநீர், விவசாயம் என அனைத்திற்கும் பயன்படுவதாகும்.**

பருவ மழை சீராக இன்றி பேய் மழையாக, பெரும் மழை பெய்தால் அதுவே தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும்

பொதுவாக செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் புயல் மழை வெள்ள காலமாக அறிவிக்கப்படுகிறது.

செப்டம்பர் இறுதியில் தொடங்கும் மழை அக்டோபர், நவம்பர் மாதங்களில் அதிகரித்து, டிசம்பர் மாதம் மத்திய பகுதி வரை அதிகரிக்கும் மழை மழையுடன் புயலும் சேர்ந்து பெரும் பாதிப்புக்கு ஆளாக்கும்.

இவ்வாண்டு டிசம்பர் ஒன்றாம் தேதி முதல் சீராக தொடங்கிய மழை, மூன்றாம் தேதி அதிகரித்து நான்காம் தேதி பெரும் மழையுடன் புயல் காற்றும் வீசியது.

இதன் காரணமாக சென்னை பெருநகரம் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இது குறித்து ஜனசக்தி ஆசிரியர் தோழர் டி. எம். மூர்த்தி மிக விரிவான முறையில் ஜனசக்தியில் எழுதிய கட்டுரையை படித்திருப்பீர்கள்.

இம்மாவட்டங்களில் நமது தோழர்கள், மாவட்ட செயலாளர்கள், முன்னணி ஊழியர்கள் தங்களால் முடிந்த வரையில் நிவாரண பணிகளில் ஈடுபட்டது பாராட்டிற்குரியது.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள், தொழிலாளர்கள் என அனைவரும் களத்தில் நின்று பணியாற்றினார்.

அரசும் நிவாரணங்களை அறிவித்து வழங்கிட முற்பட்ட நிலையில், டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய இருதினங்கள் தென் மாவட்டங்களில் பெய்த பெரும் மழை, பேய் மழையாக கொட்டித் தீர்த்தது.

இப்பெருமழையின் காரணமாக தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இம்மாவட்டங்களில் உள்ள கண்மாய்கள் மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு கண்மாயும் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் ஏக்கர் சாகுபடி நிலங்களுக்கு, பாசனத்திற்கு பயன்பட்டு வருகின்றது.

தமிழகத்தின் புகழ்மிக்க நதியான தாமிரபரணி ஆறு பெருமழை காரணமாக கரைபுரண்டு ஓடியது. இதன் காரணமாக மழை நீர் வடிவதற்கு வழி இல்லாத நிலை ஏற்பட்டது.

பெரும் மழையின் காரணமாக கண்மாய்கள் நிரம்பி வழிந்த நிலையில், தொடர்ந்து மழையின் காரணமாக கண்மாய்களின் கரைகள் உடைந்து தண்ணீர் முழுவதும் வெளியேறியது. இதன் விளைவாக வெள்ளக்காடாக காட்சியளித்தது.

தூத்துக்குடி, நெல்லை மாநகரங்கள் தண்ணீரில் தத்தளித்தது. தண்ணீர் முழுவதுமாக வடிந்து இயல்புநிலை திரும்ப பல நாட்களாகின.

மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டது. குடிநீர், பால் மற்றும் அத்தியாவாசிய பொருட்கள் இன்றி தவித்தது மட்டுமின்றி, எங்கே குடியிருப்பது என்பது பெரும் பிரச்சனையானது. வீடுகள், அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள் அனைத்திற்குள்ளும் தண்ணீர் புகுந்தது.

தங்களது சொந்த வீட்டில் நிற்பதற்கு கூட இடம் இன்றி மக்கள் பரிதவித்து நின்றார்கள்.

அவர்களின் ஆடைகள், படுக்கை விரிப்புகள், வீட்டு உபயோக பொருட்கள், பிரிட்ஜ், கிரைண்டர், வாஷிங் மெஷின், மிக்ஸி, மின்விசிறிகள், ஏர் கூலர் இருசக்கர வாகனங்கள் உள்ளிட்டவை சேதம் அடைந்தன.





குடிசை வீடுகளில் மன்சுவர் இடிந்து தரைமட்டமாகி விட்டன. இவர்களது வீட்டில் என்ன பொருள் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். பானை, குடம், பிளாஸ்டிக் குடம், தட்டு, கரண்டி போன்ற பொருட்கள் எல்லாம் தண்ணீரில் மிதந்து சென்றன. எங்கே சென்றது யாருக்கும் தெரியாது. சிறு தொழில் புரிவோர். மீண்டு எழு முடியாத அளவுக்கு பாதித்துள்ளனர்.

இவர்களின் நிலை இது வென்றால், விவசாயிகளின் நிலை மீண்டெழ எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று கணித்து சொல்ல இயலாது.

தாங்கள் சாகுபடி செய்து அறுவடைக்கு தயாராக இருந்த நெற்கதிர்கள். தண்ணீரில் மூழ்கி முளைத்துவிட்டன. தண்ணீரில் தெப்பத்தில் கதிர்கள் மிதந்து கொண்டிருந்தன.

வாழை மரங்கள் தார் முற்றி வரும் பொங்கலுக்கு பயன்படக்கூடிய நிலையில், வாழை மரங்கள் சாய்ந்து போர்க்களம் போல காட்சியளிக்கின்றது.

உளுந்து, சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, கடலை போன்ற தானியங்களும், ஆம்பூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெருமளவு சாகுபடி செய்துள்ள சிறு கிழங்குகளும் இம்மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி உப்பளம் பகுதியில் உப்பளங்கள் பாதிக்கப்பட்டதுடன், முன்பு சேகரித்து வைத்திருந்த உப்புக்களும் பெரும் சேதத்திற்கு உள்ளாகி இருப்பதுடன், இதில் பணிபுரிந்து வரும் உப்பள தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்க ஓரிரு மாதங்கள் ஆகக்கூடும்.

விலை மதிக்கவொண்ணா மனித உயிர்கள் காப்பாற்ற இயலாத நிலை, சுவரிடிந்து விழுந்தும், தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டும் பலர் இறந்துள்ளனர்.

ஆடு, மாடு, கோழி என கால்நடைகள் பெறும் எண்ணிக்கையில் மாண்டு போயின.

விருதுநகர் மாவட்டம் வடக்கு நத்தம் கிராமத்தில் ஒரே குடும்பத்தில் 200 வெள்ளாடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளதை நேரில் காண முடிந்தது.

பெருமழை வெள்ள பாதிப்பு ஏற்பட்டவுடன், அமைச்சர் பெருமக்களுக்கு மாவட்ட வாரியாக பொறுப்பு அளிக்கப்பட்டு, அனைத்து அமைச்சர்களும், ஆளும்கட்சி மற்றும் தோழமை கட்சி மக்கள் பிரதிநிதிகள் களத்தில் நின்று பணியாற்றி வருவதை கண்கூடாக காண முடிந்தது.

முதலமைச்சர் டெல்லி சென்று இந்தியா கூட்டணி கூட்டத்தில் (டிசம்பர் 19) கலந்துகொண்டு அன்று இரவு பிரதமர் நேரம் ஒதுக்கி தந்த இரவு 10:30 மணிக்கு பிரதமரை சந்தித்து, தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை மற்றும் புயலால் ஏற்பட்ட சேதங்கள், பாதிப்புகள் அனைத்தையும் விவரமாக எடுத்துக் கூறி, தமிழ்நாட்டிற்கு இயற்கை பேரிடரில் ஏற்பட்ட பாதிப்பை ஏற்று பேரிடர் பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்றும், பாதிப்புகளில் இருந்து மீளவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கவும் கோரினார்.

1. தற்காலிக நிவாரணமாக ரூபாய் 7033 கோடி
2. நிரந்தர நிவாரணமாக ரூபாய் 12659 கோடி
3. தென் மாவட்டங்களுக்கு ரூபாய் 2000 கோடி

ஆக மொத்தமாக 21, 692 கோடி தேவை, இதனை ஒன்றிய அரசு வழங்கிட வேண்டும் என்று எடுத்து கூறினார்.

டிசம்பர் மாதம் தொடக்கத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை பார்வையிட வந்த மத்திய குழு, சேதங்களை பார்வை யிட்டதுடன், அரசு சிறப்பாக செயல்பட்டுள்ளது என பாராட்டியதுடன், முதலமைச்சரை சந்தித்து அவர் அளித்திட்ட கோரிக்கை மனுவையும் பெற்றுச் சென்றனர்.

தென் மாவட்டங்களுக்கும் மத்திய குழு வந்து சென்றுள்ளது. மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜநாத் சிங்கும் தமிழ்நாட்டிற்கு வந்து, ஹெலிகாப்டர் மூலம் சுற்றி பார்த்து சென்றுள்ளார்.

இதன் மூலம் பாதிப்பின் தன்மைகளை ஒன்றிய அரசால், முழுமையாக அல்லது ஓரளவுக்கேனும் உணர்ந்திருக்க முடியும்.

இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறவும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை ஈடு செய்ய பொருளாதார உதவியும் தேவை.

இவை மட்டுமின்றி சாலைகள், மின்சாரம், கட்டிடங்கள் பாதிப்பு ஏற்பட்டுள்ளன. ஆற்றுக்கரைகள், வடிகால் கரைகள், கண்மாய் குளங்கள், ஏரிகள் அனைத்தும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளன.

இவைகளை சரி செய்து பழைய நிலைக்கு கொண்டு செல்ல வேண்டுமெனில், பெரும் நிதி தேவை.

தேவைகள் அனைத்தையும் மாநில அரசே ஈடு செய்ய இயலுமா? நடைமுறை சாத்தியம்தானா?

வரிப்பணம் முழுவதையும் வாரி சுருட்டி செல்லும் ஒன்றிய அரசு, மாநிலம் பாதிக்கப்படும்போது மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டாமா?

சிறிதும் மனிதாபிமானமற்ற முறையில் ஒன்றிய நிதி அமைச்சர், மாநில அரசுக்கு எதிராக அளித்துள்ள பேட்டி அவர் வகிக்கும் பொறுப்புக்கு அழகல்ல.

ஒன்றிய அரசுக்கு இருக்கும் பிரச்சினை ஒரே ஒரு பிரச்சனை தான்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்தியா கூட்டணி கூட்டத்தில் கலந்து கொண்டது அவர்களை மிகவும் பாதித்துள்ளது என்பதனை நிர்மலா சீதாராமன் பேட்டி வெளிப்படுத்துகின்றது.


(இப்பேட்டியினை கண்டித்து மாநில கட்சியின் சார்பாக தனி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது)

அல்லலுரும் மக்களின் வாழ்க்கையோடு விளையாடும் அற்பர்களின் ஆட்சி ஒன்றியத்தில் நடைபெறுகின்றது.

அவர்களது அடாவடிதனத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

ஆயத்தமாவீர்!
வணக்கம்!

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்





1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மத்தியக் குழுவும் விரிவாக பயணம் செய்து, வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்துள்ளது. ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சரும் பார்வையிட்டுள்ளார். அதன் பிறகும், இயற்கைப் பேரழிவை எதிர்கொள்ள ஒன்றிய அரசு இதுவரை பேரிடர் நிவாரண நிதி வழங்கவில்லை.

ஆனால் ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பேரிடர் பாதித்த பகுதியாக அறிவிக்க முடியாது என்கிறார். தமிழ்நாடு அரசின் மீதும், அமைச்சர்கள் மீதும் அவதூறாகப் பேசி, தமிழ்நாட்டு மக்களை அவமதிக்கும் மலிவான அரசியலில் ஈடுபட்டு வருகிறார்.

ஒன்றிய அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும், தமிழ்நாடு அரசு கோரியுள்ள பேரிடர் கால நிதியை முழுமையாக வழங்க வலியுறுத்தியும் சனவரி 8 ஆம் தேதி திங்கள் கிழமை தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்'' என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிவித்தார். இதனையடுத்து பல்வேறு தலைவர்கள் உரையாற்றினர்.





### பேரிடராக அறிவிக்க வேண்டும்

நிறைவாக தோழர் இரா.நல்லகண்ணு உரையாற்றினார். அப்போது, ''தமிழ்நாட்டில் பல மாவட்டங்கள் புயல், மழை பேரிடரால் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தென்மாவட்டங்களில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியது வேதனை அளிக்கிறது. ஒரு தனிமனிதனுக்கு 99 வயது என்பது சாதாரண விஷயம். பேரிடர் ஏற்பட்டிருக்கும் நேரத்தில் பிறந்தநாள் பெருமை பாராட்டும் விழாவாக இருக்கக் கூடாது என்று கவலைப்பட்டோம்.

முதலமைச்சர் இங்கு நேரில் வருவதாக இருந்தார். பல்வேறு பணிகளால் வர இயலவில்லை என்பதால் கைப்பேசியில் தொடர்பு கொண்டு பேசி வாழ்த்துத் தெரிவித்தார். வெள்ளம், பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு முதலமைச்சர் நேரில் சென்று நிவாரணப் பணிகளை விரைவாக மேற்கொண்டு வருவதற்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றிய பாஜக அரசு பேரிடர் கால நிவாரண நிதி வழங்காமல் தமிழ்நாடு அரசுக்கு எதிராக பேசுவது சரியல்ல. பெருமழை, வெள்ள பாதிப்புகளை தேசிய பேரிடராக ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு அரசு கேட்டுள்ள 21 ஆயிரம் கோடி ரூபாயை ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டும். இதனை வலியுறுத்தி போராட்டம் நடத்துவோம். இங்கு வந்துள்ள தலைவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றும் இரா.நல்லகண்ணு தெரிவித்தார்.

### தலைவர்கள் வாழ்த்து

முதலமைச்சரும் திமுகழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அலைபேசி வழியாக தோழர் இரா. நல்லகண்ணு அவர்களுக்கு வாழ்த்துக் கூறினார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திமுகழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., பொதுச் செயலாளர் வன்னியரசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் கே.பாலகிருஷ்ணன், ஜி.ராமகிருஷ்ணன், மூத்த தலைவர் டி.கே.ரங்கராஜன், செயற்குழு உறுப்பினர் ப.செல்வசிங், மாநிலக்குழு உறுப்பினர் ராஜசேகர், திரைப்படக் கலைஞர் சிவகுமார், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.கே.வாசன் எம்.பி., அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சி.எச்.வெங்கடாசலம், ஐக்கிய விவசாயிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன், பியூசிஎல் அமைப்பைச் சேர்ந்த பேராசிரியர் சங்கரலிங்கம், உழைக்கும் மகளிர் அமைப்பின் லில்லி மேரி மற்றும் கட்சியின் மாநில துணைச் செயலாளரும் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான நா.பெரியசாமி, மாநில செயற்குழு, நிர்வாகக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், தொழிற்சங்க தலைவர்கள், விவசாயிகள் இயக்கத் தலைவர்கள், பத்திரிக்கையாளர்கள் என ஏராளமானோர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு நேரில் வாழ்த்து தெரிவித்தனர். மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, நடிகர் விஜய் உள்ளிட்டோர் கைப்பேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

கட்சியின் அமைப்பு தினத்தையொட்டி 'ஜனசக்தி' வார இதழ் ஆசிரியர் டி.எம். மூர்த்தி வெளியிட்ட சிறப்பிதழ்களை டாக்டர்.ஜி.ஆர்.ரவீந்திரநாத், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். மாத நாட்காட்டியை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் சி.எச்.வெங்கடாசலம் வெளியிட, உழைக்கும் பெண்கள் அமைப்பின் (ஏஐடியூசி) தேசிய ஒருங்கிணைப்பாளர் வகிதா நிஜாம் பெற்றுக் கொண்டார். ஜனசக்தி ஊழியர்களுக்கு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்.

கட்சியின் மத்திய சென்னை மாவட்டக் குழு சார்பில் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு வழங்க 200 போர்வைகள் வழங்கப்பட்டன. அம்பத்தூர் லோகேஷ், அவரது மகள்கள் யாழினி, மிதுனா ஆகியோர் ரூ.13050 ம், 'ஜனசக்தி' வடிவமைப்பாளரின் மகன் சா.மு.தமிழ்மதி உண்டியலில் சேமித்த ரூ.1190 ம், வெள்ள நிவாரண நிதிக்காக தோழர்.இரா. நல்லகண்ணுவிடம் வழங்கினர்.

பாதுகாப்புத்துறை கிளையின் சார்பில் ரவிக்குமார், ரூ.2000, மாதர் தேசிய சம்மேளன மாநிலச் செயலாளர் மு.கண்ணகி ரூ.2208 கட்சி வளர்ச்சி நிதி வழங்கினர். இந்த நிகழ்வின் தொடக்கத்தில் செல்வக் குடும்பத்தில் பிறந்தவரும், பாரிஸ்டர் பட்டம் பெற்ற வரும், கட்சியின் புகழ்மிக்க தலைவராக திகழ்ந்தவருமான கே.டி.கே. தங்கமணி அவர்களது 22வது நினைவு நாளையொட்டி அனைவரும் அவரது திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

### திருப்பூரில் பேரணி, பொதுக்கூட்டம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 99ம் ஆண்டு அமைப்பு தினத்தையொட்டி திருப்பூரில் டிசம்பர் 24 அன்று மாபெரும் பேரணி நடைபெற்றது. அன்று மாலை அரிசி கடை மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவரும் திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினருமான கே.சுப்பராயன் எம்.பி. சிறப்புரை ஆற்றினார். அப்போது, ''ஒருபோதும் கம்யூனிஸ்ட் கட்சி அழியாது. அத்தகைய தியாக பாரம்பரியம் கொண்ட கட்சி 99 வயது முடிந்து, 2024 டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி தொடங்கி 2025 டிசம்பரில் நூற்றாண்டு நிறைவடைகிறது. இந்திய நாடு முழுவதும் மாபெரும் தியாகம் செய்த, தியாகத்திலேயே பிறந்து, தியாகத்திலேயே வளர்ந்த கட்சி தன்னுடைய நூற்றாண்டு விழாவை வருடம் முழுவதும் கொண்டாட இருக்கிறது. அதற்கு ஒரு முன்னோட்டம் தான் இன்றைக்கு 99 வது ஆண்டு நிகழ்ச்சி. எனவே, அந்த மகத்தான நூற்றாண்டு கொண்டாட்டத்திற்கு நாம் தயாராக வேண்டும்'' என்று சுப்பராயன் எம்.பி. குறிப்பிட்டார். (அவரது முழுச் சொற்பொழிவு அடுத்த இதழில் வெளிவருகிறது)

இந்த கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச்செயலாளர் நா.பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, முன்னாள் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் ஜி.காளியப்பன், புறநகர் மாவட்ட செயலாளர் கே.எம்.இசாக், மாநகரத் துணை மேயர் எம்.கே.எம்.பாலசுப்ரமணியம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

### சத்தியமங்கலத்தில் செங்கொடி அணிவகுப்பு

ஈரோடு வடக்கு மாவட்டம் சத்தியமங்கலத்தில், செங்கொடி அணிவகுப்புடன் கட்சி அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாவட்டச் செயலாளர் சு.மோகன்குமார், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் பி.எல்.சுந்தரம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

**தொகுப்பு: வ.மணிமாறன்**

## வினாடி - வினா

1 கயா காங்கிரஸ் மாநாட்டில் (1922) ''கம்யூனிஸ்ட் அகிலத்தின் பிரதிநிதியாக பங்கேற்கிறேன்'' என்று பேசிய தலைவர் யார்?

2 சிங்காரவேலர் 1923ல் தொடங்கிய கட்சியின் பெயர் என்ன?

3 தமிழ்நாட்டில் அமைப்பு ரீதியாக கம்யூனிஸ்ட் கட்சி கட்டப்பட்டது எப்போது?

4 முதன் முதலில் உருவாக்கப்பட்ட நாள்காட்டி (காலண்டர்) எது?

5 அம்பேத்கர் 1927ல் மகத் சத்தியாகிரக போராட்டத்தை எதற்காக நடத்தினார்?

6 சர்வதேச நீதிமன்றத்துக்கான நீதிபதிகளை தேர்ந்தெடுப்பது யார்?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 39

# அரசியல் செய்யாது, நிவாரணம் வழங்குக!

வரலாறு காணாத பேய்மழை, தென் மாவட்டங்களில் கொட்டி தீர்த்து இருக்கிறது.

சுற்றுச்சூழல் சீர்கேடு, பருவ காலநிலையில் ஏற்படும் கொடூர மாற்றங்கள் புதிய பாடங்களைக் கற்றுத் தருகின்றன.

இந்தப் பேரிடரின் போது, ஏற்பட்ட பாதிப்புகளை பேசுவதை விட, மாநில அரசு என்ன செய்கிறது என்று ஒன்றிய அரசும், அதை ஆளும் பாஜகவும் பெரும் அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்றன.

பேரிடர்களைக் கவனத்தில் கொண்டு 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை சட்டம் கொண்டுவரப்பட்டது. இதற்கான நிதி ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மாநில அரசியலுக்கு வருவாய் வரும் வழிகளை எல்லாம் அடைத்து ஒன்றிய அரசு ஜிஎஸ்டி வரி கொண்டு வந்து விட்டது.

எனவே ஒரு மாநிலத்துக்குள் நிகழும் பேரிடர்களுக்கு, நிரந்தரமாக மாநில பேரிடர் நிதி (SDRF) உருவாக்கப்பட்டது. இதில் 25% மாநிலமும் 75% ஒன்றிய அரசும் வழங்கும். இந்த நிதியும் போதாத அளவுக்கு பெரும் பேரிடர் என்றால், அதற்கு நிவாரணம் அளிக்க தேசிய பேரிடர் நிதி (NDRF) உருவாக்கப்பட்டது.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூற்றுப்படி, 2023–24 நிதியாண்டுக்கான மாநில பேரிடர் நிதி 1200 கோடி ரூபாய். இதில் ஒன்றிய அரசு 900 கோடியும் மாநில அரசு 300 கோடியும் வழங்க வேண்டும். இங்கு எந்த பேரிடரும் இல்லை என்றாலும் இந்த தொகை நிரந்தர நிதியாக வைக்கப்படும்.

ஆனால் மிக்ஜம் புயல் காரணமாக டிசம்பர் 3,4 தேதிகளில் சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களும் வெள்ளத்தில் மிதந்தன. அதிலிருந்து ஒருவாறு தேறுவதற்குள், டிசம்பர் 17,18 தேதிகளில் தென் மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

டிசம்பர் 19 இரவு 10:30 மணிக்கு பிரதமர் ஒதுக்கிய நேரத்தில் அவரை சந்தித்த தமிழ்நாடு முதல்வர், உடனடியாக 7300 கோடியும், நிரந்தர நிவாரணத்துக்கு 12,000 கோடி தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

ஏற்கனவே சென்னை வெள்ளத்தின் போது டிசம்பர் 7ல் 450 கோடி ஒன்றிய அரசு தந்தது. இப்போது டிசம்பர் 12ல் இன்னொரு 450 கோடி தந்துள்ளது. ஆக மொத்தம் 900 கோடி ரூபாய் வழக்கமாகவே மாநில பேரிடர் நிதிக்கு தர வேண்டிய தொகை தான். இந்த வெள்ளை சேதங்களுக்காக தரப்பட்டதாக சொல்வது உண்மையல்ல.

தேசிய பேரிடர் நிதியிலிருந்து பணம் கொடுங்கள் என்று மாநில அரசு கேட்டால், ‘ஒன்றிய அரசு என்ன ஏ.டி.எம்.மா’ என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் எதிர்க் கேள்வி கேட்டார்.

அவர் பயன்படுத்தும் சொற்களும், அவரது உடல் மொழியும், தோரணையும் பார்க்கும் போது, அந்தப் பணம் என்ன உங்கள் வீட்டு சொத்தா? என்று எல்லோர் மனதிலும் தோன்றவே செய்யும். அதை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளிப்படையாக கூறிவிட்டார்.

ஏற்கனவே பணம் போட்டு இருந்தால் ஏடிஎம் பணம் கொடுக்கும். மற்ற பல மாநிலங்களை விடவும் அதிக வரி கொடுக்கும் தமிழ்நாட்டுக்கு, பேரிடரின் போது, நிவாரணம் கேட்பதற்கு முழு உரிமையும் உண்டு.

வார்த்தையை அடக்க வேண்டும் என்கிறார் நிர்மலா. ‘உக்ரைனுக்கு ஏன் இந்திய மாணவர்கள் படிக்கப் போகிறார்கள்?’ என்று போரின்போது அவர் கேட்டது, ‘எங்கள் வீட்டில் வெங்காயம் பூண்டு பயன்படுத்துவதில்லை’ என்று இவர் சொன்னதும், சோனியாவை ‘காங்கிரஸ் விதவை’ என்றும், ராகுல் காந்தியின் ‘மாமா வீட்டில் இருந்தா பணம் வருகிறது’ என்று பிரதமரே பேசியதும் மக்கள் மறந்து விடவில்லை.

டிசம்பர் 12ஆம் தேதி மழை அறிவிப்பு தந்து விட்டோம் என்று சொன்னது இன்னொரு பச்சைப்பொய். 17ஆம் தேதி மதியம் தான் அறிவிப்பு தரப்பட்டது. அதற்குள் மழை தொடங்கி விட்டது.

கப்பற்படை, விமானப்படை, பேரிடர் படை எல்லாம் வேலைபார்த்தன என்று நிதியமைச்சர் கூறுவது நகைக்கத்தக்கது. தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பகுதி தான். தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகள் மட்டுமல்ல, படகை எடுத்துக் கொண்டு மீனவர்களும், தன்னார்வலர்களும் ஆற்றிய தொண்டு ஈடு இணையற்றது. இவர்கள் யாரும் பெருமை பேசவில்லை.

குஜராத் வெள்ளத்தின் போது, கேட்கும் முன்பே ஓடோடி சென்று ஆயிரம் கோடியை அள்ளி வீசிய பிரதமர், தமிழ்நாட்டை வஞ்சிப்பது அந்த பதவியின் தகுதிக்கு உகந்தது அல்ல.

தமிழக அரசு கோரிய நிவாரணத் தொகையை, காலம் தாமதிக்காமல் வழங்க வேண்டும்.

# தேமுதிக தலைவர் விஜயகாந்த் மறைவுக்கு இரங்கல்



தேமுதிக தலைவர் விஜயகாந்த் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல் தெரிவித்துள்ளது.

தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜயகாந்த் (71) 28.12.2023 ல் அதிகாலையில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

மதுரை மாவட்டத்தில் சாதாரண குடும்பத்தில் 1952 ஆகஸ்ட் 25 ஆம் தேதி பிறந்த விஜயகாந்த் 1979 ஆம் ஆண்டில் திரைத்துறையில் நுழைந்து வெற்றிகரமாக வளர்ந்து “புரட்சி கலைஞர்” என அனைவராலும் ஏற்கப்பட்டார். காவல்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் வேடத்தில் அதிகபட்ச திரைப்படங்களில் மிகச் சிறப்பாக நடித்த விஜயகாந்த் அனைவராலும் “கேப்டன்” என்று அழைக்கப்பட்டார்.

திரைத்துறையில் புகழ் பெற்ற விஜயகாந்த் தென்னிந்திய திரைக் கலைஞர்கள் சங்கத்தின் தலைவராக பணியாற்றியுள்ளார். அவரது நடிப்புத் திறனுக்கு தமிழ்நாடு அரசு உட்பட பல்வேறு அமைப்புகள் ஏராளமான விருதுகள் வழங்கியுள்ளன.

சிறுவயது முதலே அரசியல் ஆர்வம் மேலோங்கி இருந்ததால் 2005 செப்டம்பர் 14 ஆம் தேதி தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் என்ற அரசியல் கட்சி தொடங்கி, 2006 சட்டமன்ற தேர்தலையும் 2009 நாடாளுமன்றத் தேர்தலையும் சந்தித்தது. பதிவான வாக்குகளில் 10 சதவீதத்திற்கும் கூடுதலாக வாக்குகள் பெற்று, தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் முக்கிய இடம் பெற்றார்.

2006 விருத்தாச்சலம் சட்டமன்றத் தொகுதியில் இருந்து சட்டமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்ட விஜயகாந்த் 2011 தேர்தலில், அஇஅதிமுக கூட்டணியில் 41 தொகுதிகளில் போட்டியிட்டு 29 தொகுதிகளை வென்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் எதிர்கட்சித் தலைவராக ஐந்தாண்டுகள் செயல்பட்டார்

தமிழ்நாட்டில் 2016 ஆம் ஆண்டு உருவான மக்கள் நலக் கூட்டணியில் இணைந்து அதற்கு தலைமை ஏற்று செயல்பட்டார்.

தனிப்பட்ட முறையில் பழகுவதற்கு இனிய பண்பாளர். மனதில் பட்டதை வெளிப்படையாக பேசுபவர். சகோதர பாசத்துடன் உபசரித்து உற்சாகப்படுத்துபவர்.

இந்தக் காலகட்டத்தில் அவரது உடல் பாதிப்பு அவரது அரசியல் மற்றும் பொது வாழ்வுக்கு பெரும் சவாலானது. அதனையும் மன வலிமையோடு, மருத்துவ சிகிச்சை பெற்று, எதிர்த்து போராடி வந்த விஜயகாந்த் காலமானார் என்பது தாங்கவொணா வேதனையளிக்கிறது.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரது பிரிவால் வாடும் அவரது வாழ்விணையர் பிரேமலதா, மகன்கள் விஜயபிரபாகரன், சண்முக பாண்டியன் மற்றும் மைத்துனர் எல்.கே.சுதிஷ் மற்றும் தேமுதிக நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## விவசாய தொழிலாளர் நல வாரியம் அமைக்க கோரி

# ஜன.8 தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம்




தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில நிர்வாக குழு மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டம், சென்னை பாலன் இல்லத்தில் மாநிலத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஆர். முத்தரசன் அரசியல் விளக்க உரை ஆற்றினார். சங்கத்தின் தேசிய செயலாளர் ஆ. ராமமூர்த்தி அகில இந்திய மாநாட்டு முடிவுகளை விளக்கி பேசினார். மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் வேலை அறிக்கை மற்றும் எதிர்கால அறிக்கையை சமர்ப்பித்தார். இதில் மாநிலத் துணைத் தலைவர், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. பத்மாவதி, வரதராஜன், மாநில செயலாளர்கள் வி.பி. பழனிசாமி, சு. மகேந்திரன் உள்ளிட்ட மாநில நிர்வாக உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர்கள் பங்கேற்றனர்

### ஜனவரி 8 நல வாரியம் கோரி ஆர்ப்பாட்டம்

விவசாய தொழிலாளர்களுக்கு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட நல வாரியம், கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் கலைக்கப்பட்டு விவசாய தொழிலாளர்களுக்கு உதவாத உழவர் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனை கைவிட்டு மற்ற நல வாரியங்களை போல கலைஞர் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட விவசாய தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும்

100 நாள் வேலை திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டும். 100 நாள் வேலை திட்ட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய கூலி நிலுவைத் தொகையை உடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஜனவரி 8 அன்று தமிழ்நாடு முழுதும் அரசு அலுவலகங்களின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம் ஞாயிறு ஊராட்சி கண்ணியம்பாளையத்தை சேர்ந்த, விவசாயக் கூலி தொழிலாளர்கள் முனுசாமி, ஜீவா ஆகியோர்களது மகன்களான ஏழாம் வகுப்பு படிக்கும் விஷ்வா, ஆறாம் வகுப்பு படிக்கும் சூர்யா ஆகிய இருவரும் வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர். மாணவர்களின் குடும்பத்தின் ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு மிக்சாம் புயல் நிவாரண நிதியும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும் என தமிழக அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பாஜகவின் மோடி ஆட்சியே ஓர் தேசிய பேரிடர்!



த.லெனின்

**பேரிடர்கள் என்பது, பருவகால நிலை வேறுபாட்டுக் காரணிகள் (Geo-climatic factors) காரணமாகவும் நிலவியல் கூறுகள், சுற்றுப்புறச்சூழல் சீர்கேடுகள், மக்கள் தொகைப் பெருக்கம், நகரமயமாதல், தொழிற்சாலைகளின் பெருக்கம் போன்றவற்றின் காரணமாகவும் பேரிடர்கள் நிகழ்கின்றன.**

இயற்கைச் சீற்றங்களினாலும், மனிதத் தவறுகளினாலும் பல்வேறு இடர்களும் பேரிடர்களும் ஏற்படுகின்றன. இடர் என்பது, அபாயகரமானதாக உணரக்கூடிய ஒரு நிகழ்வு. இது மனிதனின் அன்றாட வாழ்க்கைப் பாதிப்பு, உயிரிழப்பு, சுகாதாரக் கேடுகள், உடைமைகளின் சேதம், சமுதாய மற்றும் பொருளாதாரச் சீர்கேடு, சுற்றுச்சூழல் சீர்கேடு ஆகியவை ஏற்படுகின்றன.

இந்த இடரானது, உச்சநிலையை அடையும்போது பேரிடராக (Disaster) மாறுகிறது. மக்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டுப் பெருமளவில் உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தும். இது போன்ற ஒரு நிகழ்வைப் "பேரிடர்" என்கிறோம்.

தேசிய பேரிடர் மேலாண்மை முகமை (NDMA)என்பது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு நிறுவனமாகும். இதன் மிக முக்கிய நோக்கம் இயற்கை அல்லது மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரிடர்களின் போதும், நெருக்கடி காலத்தின் போதும் விரைந்து பணியாற்றத் தேவையான செயல்திறன் மேம்பாடு மற்றும் பேரழிவு மீட்பு பொறுப்புகளையும் சிறப்பாக செயல்படுத்துவதாகும். இம் முகமை டிசம்பர் 2005 ல் இந்திய அரசால் இயற்றப்பட்ட பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டதாகும். பிரதம மந்திரி இதன் முழுமையான அதிகாரம் பெற்ற தலைவர் ஆவார்.


இந்நிறுவனம் கொள்கைகளை வடிவமைத்தல், வழிகாட்டுதல் மற்றும் சிறந்த நடைமுறைகளை உருவாக்கும் பணிகளை மேற்கொள்வதுடன், மாநில பேரிடர் மேலாண்மை முகமைகளுடன் முழுமையான மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட அணுகுமுறையை உறுதிப்படுத்துகிறது. மேலும் அவற்றுடன் ஒருங்கிணைந்து அனைத்துப் பணிகளையும் செயல்படுத்துகிறது.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் பிரதம மந்திரியின் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது, மேலும் அதன் செயல்பாடுகளை நிறைவேற்ற உதவுவதற்காக செயலாளர்களை கொண்ட தேசிய செயற்குழு உருவாக்கப்பட்டது.

மாநில அளவில், மாநில முதல்வர் தலைமையில் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் உருவாக்கப்பட்டது. மாவட்ட அளவில், மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 இன் படி, "பேரழிவு"என்பது இயற்கை அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட விபத்தினால் அல்லது அலட்சியத்தால் ஏற்படுவது ஆகும். ஒரு இயற்கை பேரழிவில் பூகம்பம், வெள்ளம், நிலச்சரிவு, சூறாவளி, சுனாமி, நகர்ப்புற வெள்ளம் ஆகியவைகளும் இவற்றில் அடங்கும். மனிதனால் உருவாக்கப்பட்ட அணு, உயிரியல் மற்றும் இரசாயன பேரழிவுகளாகக் கூட இருக்கலாம்.

பேரிடர் மேலாண்மைக்கான தேசியக் கொள்கை, பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் படியாக தயாரிக்கப்பட்டது. இது பேரிடர்களை முழுமையான முறையில் கையாள்வதற்கான கட்டமைப்புகளை



வழங்குகிறது.

தேசிய பேரிடர் மேலாண்மைத் திட்டம் (NDMP) முதன்முதலில் 2016 இல் வெளியிடப்பட்டது. இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கம் இந்தியா பேரழிவைத் தாங்கக்கூடியதாக மாற்றுவது இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளின் போதும் அதற்குப் பிறகும் ஏற்படும் சேதங்களை வெகுவாகக் குறைப்பதற்கு இத் திட்டம் 2018 இல் புதுப்பிக்கப்பட்டது.

### தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் என்றால் என்ன?!

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் என்பதின் முதன்மை நோக்கம் இயற்கை அல்லது மனிதனால் ஏற்படும் பேரழிவுகளை ஒருங்கிணைந்த முறையில் எதிர்கொள்ளவும் நெருக்கடி காலங்களில் செயல்படுவதற்குமான திறனை வளர்ப்பதும் ஆகும்.

பேரழிவுகளை எதிர்கொள்ளக்கூடியதாக இந்தியாவை மாற்றவும், கணிசமாக அதன் அபாயங்களை குறைக்கவும், அரசு நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களிலும் பேரழிவுகளைச் சமாளிக்கும் திறனை அதிகரிப்பதன் மூலம் சமூக,பொருளாதார, மற்றும் சுற்றுச்சூழல் மனித உயிர் இழப்புகள்,வாழ்வாதாரங்கள் மற்றும் சொத்துக்களின் இழப்புகளைக் குறைப்பதற்கான திட்டமிடலுக்காக உருவாக்கப்பட்டது இந்த அமைப்பு ஆகும்

பேரழிவுகளின் அனைத்து கட்டங்களிலும் செயல்படும் அரசு நிறுவனங்களுக்கு ஒரு ஆவணம் அல்லது வழிகாட்டியாக இது செயல்படுகிறது.பேரிடர் அபாயம் மற்றும் உயிர்கள் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஏற்படும் இழப்புகளை குறைக்கக்க பாடுபடும் ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பான செண்டாய் கட்டமைப்போடு இணைப்பையும் இது கொண்டுள்ளது

### பேரிடர் அபாயங்களை எதிர்கொள்ள நிர்வாகத்தை வலுப்படுத்துதல்!

மத்திய மற்றும் மாநில அரசுகள் செயல்பட வேண்டிய 6 வழிமுறைகள் உள்ளன. அவை கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

பேரிடர் அபாய குறைப்பு(DRR)மற்றும் நிறுவன வலுப்படுத்துதலை பிரதான நீரோட்டத்தில் ஒருங்கிணைக்கவும், திறன் மேம்பாடு பங்கேற்பு அணுகுமுறைகளை ஊக்குவிக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் வேலை செய்யவும் குறை தீர்க்கும் பொறிமுறை பேரிடர் இடர் மேலாண்மைக்கான தரநிலைகள், சான்றிதழ்கள் மற்றும் விருதுகளை ஊக்குவிப்பது முதலியவை தேசிய பேரிடர் மேலாண்மை திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

பேரிடர் ஆபத்து, பாதிப்புகள் மற்றும் ஆபத்துகள் பற்றிய புரிதலை மேம்படுத்துதல்!

கட்டமைப்பு, கட்டமைப்பு அல்லாத நிதி நடவடிக்கைகள் மூலம் ஒரு விரிவான திறன் மேம்பாட்டினை உருவாக்குதல் பின்னடைவுக்கான பேரழிவு அபாயத்தைக் குறைப்பதில் முதலீடு செய்தல்.

திறம்பட இதனை எதிர்கொள்வதற்காக பேரிடர் தயார்நிலையை மேம்படுத்துதல் போன்றவைகள் ஆகும்.

பேரிடர் பாதிப்புகளைத் தடுப்பதற்கும் குறைப்பதற்கும் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த கட்டமைப்பு, பொருளாதாரம், சமூகம், சட்டம், சுகாதாரம், கலாச்சாரம், சுற்றுச்சூழல், கல்வி, அரசியல், தொழில்நுட்பம் மற்றும் நிறுவன நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

பேரிடர் அபாயங்களை நிர்வகிப்பதற்கும் குறைப்பதற்கும் சமூகங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கு அதிகாரமளித்தல்.

பேரிடர் மேலாண்மையின் அனைத்து துறைகளிலும் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் திறன்களை மேம்படுத்துதல்.

பல பேரிடர் ஆபத்துக்களுக்கு திறம்பட பதிலளிப்பதற்கும் சமூகம் சார்ந்த பேரிடர் மேலாண்மைக்கும் ஒவ்வொரு மட்டத்திலும் திறனை மேம்படுத்துதல்.

சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களின் பொறுப்புகள் அவற்றின் பாத்திரங்கள் குறித்து கூட்டு பொறுப்புணர்வை ஏற்படுத்துதல்.

### தேசிய பேரிடர் அறிவிப்பு!

பேரிடர்களை தேசிய பேரிடர்களாக அறிவிப்பதற்கான சட்டங்கள் இல்லையென்றாலும் அதற்கான வழிகாட்டல்களை நமது நாட்டின் 10வது நிதி ஆணையம் 1995 – 2000 ஒரு மாநிலத்தில் உள்ள மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதி பாதிப்படைந்தால் அதனை தேசிய பேரிடர் என்று அறிவிக்கலாம் அத்துடன் விதிவிலக்காக பாதிப்பின் தீவிரத்தின் அடிப்படையிலும் பேரழிவின் அளவு அதற்கு தேவைப்படும் உதவியின் அளவு உயிர் சேதம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் தேசிய பேரிடர் என்று அறிவிக்கலாம் என்று வழிகாட்டி உள்ளது.

ஆனாலும் நிரம்ப படித்த நமது ஒன்றிய நிதியமைச்சர் திரும்ப திரும்ப சமீபத்திய புயல் மற்றும் வெள்ள பாதிப்புகளை தேசிய பேரிடராக அறிவிக்க இயலாது என்கிறார். அத்துடன் சுனாமியை கூட தாங்கள் தேசிய பேரிடராக அறிவிக்கவில்லை என்று முன்னுக்குப் பின் முரணாக பேசுகிறார். உண்மையில் தேசிய பேரிடர் ஆணையம் சுனாமிக்கு பிறகு உருவாக்கப்பட்டது. அப்படி இருக்க சுனாமியை எப்படி தேசிய பேரிடராக அறிவிக்க இயலும்? தேசிய பேரிடராக அறிவிக்கப்படாத கோவிட்19 நோய் தொற்று காலம் எப்படி ஊரடங்காக அறிவிக்கப்பட்டது?இப்படி தொடர்ந்து அவர்கள் பேசுவது ஒன்றிய அரசின் ஆணவத்தை அலட்சியத்தை எடுத்துக்காட்டுகிறது.

நெல்லை – தூத்துக்குடியில் பெய்த கன மழையை கணிக்க தவறியதற்கு முழுப் பொறுப்பு வானிலை ஆய்வு மையத்தையே சாரும்.

ஆனால் இதனை முன்கூட்டியே கணித்த ஐரோப்பிய மாதிரிகள்(ECMWF) 100செமீ மழை பெய்யும் என்று சரியாக கணித்தது, 27கிமீ இடதூரத்தில் (spatial distance)கணிப்புகளை தரும் அமெரிக்க மாதிரியான கிதிஷி, 40 – 50 செமீ மழை என்று குறைவாக கணித்திருந்தது. 12.5 கிமீ இடதூரத்தில் நவீனமாக கணிப்பதாக கூறிக் கொள்ளும் இந்திய வானிலை மய்யம் (@IMDWeather)அதிக கனமழை என்றுதான் சொன்னது. அத்துடன் ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கும் ஒரு முறை இது குறித்து துல்லிய தகவல்களை ஐரோப்பிய அமெரிக்க விண்வெளி மையங்கள் தரும் வேலையில் இந்தியாவில் அரை மணி நேரத்திற்கு மேலாக இதற்கு நேரம் ஆகிறது என்பதும் உண்மை. ஒன்றிய அரசின் கூற்றுப்படியே முன்கூட்டியே அறிவித்ததாக எடுத்துக் கொண்டாலும் ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் ரயில் ஏன் வெள்ளத்தில் சிக்கியது?

சிவப்பு எச்சரிக்கை (ஃப்ளாஷ் ஃப்ளாட்) அதிவெல்ல எச்சரிக்கை தேசிய வானிலை அறிக்கையால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் அதனை செய்யாமல் இருந்தது? கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மத்திய அரசு தொலைபேசிகளில் குறுஞ் செய்தி மூலம் தேசிய எச்சரிக்கை சோதனை நடத்தியதே அதை ஏன் இப்போது பயன்படுத்தவில்லை?

இனி ரயில் எதிரெதிரே மோதிக் கொள்ளும் விபத்துக்கள் நடக்காது அனைத்து ரயில்களுக்கும் பாதுகாப்பு கவர்ச்சி கருவி பொருத்தப்பட்டுள்ளது என்றார்கள் ஆனால் ஒரிசா ரயில் விபத்துக்கு பிறகு தான் அந்த உண்மையும் நமது டிஜிட்டல் இந்தியாவில் தெரிய வந்தது.

### கேட்டதும் தந்ததும்!

தமிழ்நாட்டில் இதுவரை 2010 இல் இருந்து 2023 வரை ஜல், தானே, நீலம், நாடா, வர்தா, ஒக்கி, கஜா, நிவர், புரவி தற்போதைய மிக் ஜாம் புயல் என பல புயல்கள் அடித்து பெரும் சேதாரத்தை விளைவித்திருக்கிறது. நிக்ஜாம் புயல் தவிர்த்த மற்ற புயல்களுக்கு தமிழ்நாடு அரசு கோரிய நிவாரணத் தொகை ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி. ஆனால் நமக்கு கிடைத்ததோ வெறும் 9390 கோடி மட்டுமே. அதாவது கேட்டதில் சுமார் 4 சதம் என்று அளவிற்கு தான் கிடைத்துள்ளது.

அதேபோல ஒக்கி புயலின் போது பாதிக்கப்பட்ட மீனவர்களை மீட்கும் பணி நடக்கவேயில்லை. குறிப்பாக ஆழ்கடலில் சிக்கிய மீனவர்களை வேண்டுமென்றே சாகவிட்டது மோடி அரசு. தப்பிப் பிழைத்த கொஞ்சம் பேரும் தங்களது சொந்த முயற்சியாலும், மற்ற மீனவர்கள் உதவியாலுமே பிழைத்தனர். பாதிக்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் தமிழ்நாடு மற்றும் கேரளாவைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் மோடி அரசின் திட்டமிட்ட அலட்சியமுமே இதற்கு முக்கியக் காரணம்.

அதனாலேயே 9302 கோடி ரூபாய் நிவாரண உதவி கேட்டதற்கு வெறும் 133 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு மனமின்றி கொடுத்தது. ஆனால் குஜராத்தில் கடந்த 2021 இல் பேசிய புயலுக்கு உடனடியாக ஆயிரம் கோடி ரூபாய் அளித்தது. கர்நாடகா பாஜக ஆட்சியில் இருந்தபோது கேட்டதில் பாதி தொகை அளித்தது ஆந்திராவிற்கு கேட்டதில் மூன்றில் ஒரு பங்கு தொகையை அளித்தது. ஆனால் தமிழ்நாட்டிற்கு என்று வரும்போது ஏதேதோ வாய்க்கு வந்ததை பேசுவதே தன்னுடைய வாடிக்கையாக கொண்டிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. தேசிய பேரிடர்களை காப்பது இருக்கட்டும் ஆனால் அதுவே ஒரு தேசிய பேரிடராக மாறிவிட்டது.

இந்த தேசிய பேரிடர்களிலுருந்து மக்களை மீட்கும் அரசியல் கடமையையும் இந்தியா கூட்டணியே ஆற்ற வேண்டும் நாட்டைக் காக்க நாட்டு மக்களை காக்க இது ஒன்று தான் சீரிய வழி! இத் திருப்பணியை நேரிய வழியில் முடிக்க ஒருங்கிணைந்து செயலாற்றுவோம்!

தொடர்புக்கு: 9444481703

# பொய்யுரை நாயகன் மோடி!



ந.சேகரன்

**2024 நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருகிறதல்லவா? எனவே வழக்கம் போல், புதிய புதிய சரடுகளை அவிழ்த்து விடுகிறார், இந்தியாவின் பிரதம பொய்யுரை நாயகர் மோடியார்.**

தற்போதைய சரடு என்ன தெரியுமா?

"நான் 3 ஆம் முறை பிரதமராகும் காலத்தில், இந்தியாவை உலகில் 3 வது வலிமை மிக்க பொருளாதார நாடாக்கி காட்டுவேன் "என்பதுதான்.

இதே வாய்சவடால் பிரதமரின் கடந்த கால வாக்குறுதிகளை பின்னோக்கி பார்த்தால், இவரது வண்டவாளங்கள் தண்டவாளத்தில் ஏறி விடுகின்றன.




### கறுப்புப் பணம் குறித்த மோடியின் வாக்குறுதி!

2014 ல் தேர்தல் பரப்புரையின் போது, வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் கறுப்புப்பணத்தை மீட்டால், ஒவ்வொரு இந்தியரின் கணக்கிலும் ரூ.15 லட்சம் வரவு வைக்கப்படும் என்றார்.

ஆனால் நடந்ததை நாமறிவோம்..

இந்தியனின் கணக்கில் வரவு வைப்பது கிடக்கட்டும்.. வெளிநாடுகளில் இந்தியர்களின் கறுப்புப்பணம் விபரங்களை, மோடி அரசிடம் , சுவிட்சர்லாந்து வங்கி 3 முறை வழங்கியுள்ளது. அதைக் கூட , மக்களிடையே செல்லாமல் மறைத்து வருகிறது மோடி அரசு. இதுதான் கறுப்புப்பணத்தை மீட்கும் மோடியின் லட்சணம்.

நாள் ஆட்சி அமைத்தல் வேலை வாய்ப்பு வாக்குறுதி !

"ஆண்டுதோறும் 2 கோடி பேர்களுக்கு வேலை கொடுப்பேன்" சரடு வாக்குறுதி விட்டதும் இதே மோடி தான்.

நடந்தது என்ன?

புதியதாக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது கிடக்கட்டும்..

குறைந்தபட்சம், ஏற்கனவே உள்ள காலி பணி யிடங்களாவது பூர்த்தி செய்தாரா மோடி? என்றால் அதுதான் இல்லை.

- **ரயில்வே துறையில் மட்டும் 3,50,000 பணி யிடங்கள் காலியாக உள்ளன..**
- **ஏற்கனவே உள்ள பணியிடம் எல்லாத் துறையிலும் லட்சக்கணக்கில் உள்ளது.**
- **2022, மார்ச் 1 நிலவரப்படி, அரசுத் துறைகளில் மட்டும், 9 லட்சத்து 64 ஆயிரத்து 359 காலி பணியிடங்கள் உள்ளன.**

உலகத்திலே அதிகமாக வேலை யில்லாதவர்கள் கொண்ட நாடாக இந்தியாவை மாற்றி அவலட்சண சாதனை படைத்துள்ளார் மோடியார். ஆம் இந்தியாவில், வேலை யில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 6 கோடிக்கு மேல்.

ஆண்டுதோறும் இந்த எண்ணிக்கை லடசக்கணக்கில் கூடிக்கொண்டே போகிறது.

இதுதான் ஆண்டுதோறும் 2 கோடி பேருக்கு வேலை கொடுக்கும் மோடியின் வாக்குறுதியின் லட்சணம்..

இதே பிரதமர் மோடியார், 2019 ஆண்டு மக்களவை தேர்தலை மனதில் கொண்டு, 2017 ஆண்டில் 71 ஆவது சுதந்திர தின கொண்டாட்ட நிகழ்வின் போது, என்ன கூறினார் தெரியுமா?

" 2022 இல் புதிய இந்தியாவை உருவாக்குவோம்."

"விவசாயிகள் வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்திக் காட்டுவோம் "

"ஊழலற்ற, கறுப்புப்பணம் அற்ற புதிய இந்தியாவை உருவாக்குவோம்""

இப்படியான வாக்குறுதிகளை அள்ளி வழங்கியவர்தான் இந்த மோடியார்.

2022 ஆண்டைக் கடந்து நாம் 2024 ஆண்டில் நுழையப் போகிறோம்.

2017 ல், மோடியார் சொன்னபடி ஏதாவது நடந்துள்ளதா? என ஆய்வு செய்தால், உண்மை உணரலாம்.

இப்போது நாம் காண்பது புதிய இந்தியாவா? அல்லது முன்னை காட்டிலும் மோசமான இந்தியாவா? என்பது நன்கு புலனாகும்.

### விவசாயிகள் வருமானம் இரண்டு மடங்காகி உள்ளதா?

இந்த வாக்குறுதி, தண்ணீரில் எழுதிய கதையானதுதான் மிச்சம். வருமானத்தை விடுங்கள்..விவசாயிகளின் உயிர்களுக்கு பாதுகாப்பு உண்டா? எனில் கிடையாது என்பதே உண்மை.

கடந்த 2022 ஆண்டில் மட்டும் 11,290 விவசாயிகள் தற்கொலைக்கு ஆளாகி உள்ளனர். இது அரசு அமைப்பின் தேசீய குற்ற ஆவண காப்பகம் கொடுத்த புள்ளி விபரம். உண்மை எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கும் என்பது நிச்சயம். இந்த 2023 ஆண்டில், மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் கடந்த அக்டோபர் வரை, தற்கொலையான விவசாயிகள் எண்ணிக்கை 2366. ஒரு மாநிலத்தில் மட்டும் இந்த எண்ணிக்கை எனில், இந்தியா முழுக்க தற்கொலை செய்து கொண்டவர்களின் 20,000க்கும் அதிகம் என்பது நிதர்சன உண்மை.

விவசாயிகளின் வாழ்க்கையில் வேட்டு வைக்கக்கூடிய 3 வேளாண்மை சட்டங்களை கொண்டு வந்ததும், ஓராண்டிற்கு மேல் எழுச்சியுடன் நடைபெற்ற விவசாயிகள் வீரச் செறிந்த போராட்டத்தில் விவசாயிகளின் உயிர்ப்பலிகளுக்குப் பின் தான் மோடியாரால் அந்த அபாயகரமான சட்டங்களை வாபஸ் பெற வைத்தனர்.

இதுதான் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கிய மோடியாரின் (அவ)லட்சணம்..

### பொய்யுரைக்கு ஒரு அளவே இல்லையா?

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் சேர்மன் ரகுராம் ராஜன், இந்தியாவின் அவல நிலையை அம்பலப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

2047 ஆண்டில் கூட இந்தியா பொருளாதார வலிமைமிக்க நாடாக மாற வாயப்பே இல்லை என்கிறார்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.5 சதமாக உள்ளது. பொருளாதாரத்தில் தொழிலாளர்களின் பங்கெடுப்பைப் பார்க்கும்போது இது குறைவுதான். அதிலும் பெண்களின் பங்களிப்பை கணக்கில் கொண்டால், ஜி 20 நாடுகளிலேயே இது குறைவாக உள்ளது.

இன்றைய வளர்ச்சியை வைத்து கணக்கிடும் போது ஆண்டிற்கு 6 சதம் வீதம் பொருளாதார ம் வளர்ந்தால , ஒவ்வொரு 12 ஆண்டிற்கு இரட்டிப்பாகும். 24 ஆண்டுகளில் தனிநபர் வருவாய் 4 மடங்கு அதிகமாகலாம். இந்தியாவில் தனி நபர் ஆண்டு வருவாய் ரூ.2 லட்சத்திற்கும் குறைவாகவே நீடித்து வருகிறது.(உண்மையில் தனிநபர் வருவாய் ஆண்டிற்குரூ. 98,911) இந்த நிலையில் மக்கள் தொகை அதிகரிக்காமல் இருந்தால் கூட, இந்தியா 2047 வரை வளர்ந்த நாடாக இருக்க வாய்ப்பில்லை.

குறைந்த நடுத்தர வருவாய் உள்ள நாடாக வேண்டுமானால் இருக்க வாய்ப்பிருக்கலாம். நிச்சயமாக பொருளாதார வலிமை உள்ள நாடாக 2047 இலும் வாய்ப்பில்லை என உறுதிபட கூறியுள்ளார் ரகுராம் ராஜன்.

### ஏற்கனவே மோடி அளித்த வாக்குறுதிகளின் கதி!

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 2.5 சதம், சுகாதாரத் துறைக்கு ஒதுக்குவதாக வாக்குறுதி அளித்தார். ஆனால் ஒதுக்கீடு செய்யப்பட்டதோ 1.9 சதம்.

மிக குறைந்த ஒதுக்கீடு காரணமாக, நாட்டிலுள்ள 6064 சுகாதார மையங்களில் 80% சதவீத அளவில் அறுவை சிகிச்சை, மகப்பேறு மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுகிறது..

### கல்வி துறையின் அவல நிலை!

மோடி அரசு 2014 இல் ஒன்றிய ஆட்சி ஏறிய போது, கல்வித் துறைக்கு மொத்த ஜி.டி.பி யில் 6% சதம், கல்வித்துறைக்கு ஒதுக்கப்படும் என்றார். ஆனால் ஒதுக்கீடு செய்யப்பட்டதோ 2.9% சதம்தான்.

மோடி ஆட்சியில்தான், இந்திய மக்கட் தொகையில் 15.14 சதவீத குழந்தைகள், ஆரம்பக் கல்வி கூட கிடைக்கப் பெறாமல் அவதிப்படுகின்றனர்.

வகுப்பு 1 முதல் 8 வரையில் படிக்கும் மாணவர்களில் 7.39 சதவீத மாணவர்கள், வறுமை காரணமாக, மேலும் படிப்பைத் தொடர முடியாமல் இடையிலே நின்று விடுகின்றனர்.

### இரு முறை பிரதமராக மோடி சாதித்தது என்ன?!

2 முறை பிரதமராக இருந்த நிலையில், இந்தியாவை எங்கு இட்டு சென்றுள்ளார் இந்த மோடியார் என்பதைப் பார்ப்போம்.

- **உலகிலே அதிகமாக அதாவது 29 கோடி ஏழைகளைக் கொண்ட நாடு இந்தியா.**
- **உலக பட்டினி நாடுகள் பட்டியலில் 125 நாடுகளில் 14 ஆவது இடத்தில் இருக்கிறது இந்தியா.**
  **உலக சராசரி பட்டினிக் குறியீடு 18.3, இந்தியாவின் பட்டினி குறியீடு 28.7 ஆக உயர்ந்துள்ளது. அதாவது வறுமை கொடுமையாக அதிகரித்துள்ளது.**
- **ஊட்டச்சத்து குறைவு காரணமாக பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை 74.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.**
- **உலகில் வேலையின்மை குறியீட்டில், இந்தியாவின் நிலை 10.4 சதவீதமாக அதிகரித்து உள்ளது.உலகிலேயே 6 கோடி இளைஞர்கள் வேலை இல்லாதது இருப்பது இந்தியாவில்தான் என்பது வெட்கக் கேடு.**
- **உலகில் தற்கொலைக்கு ஆளாக்கப்படும் விவசாயிகள் எண்ணிக்கையில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.**
- **இந்தியாவின் 2023 மொத்த ஜனத் தொகை 143 கோடி மக்களில், ஏறத்தாழ 100 கோடியே 30 லட்சம் பேர் சரிவிகித. உணவின்மையால் பாதிக்கப்படுகின்றன என்ற Global Data புள்ளி விபரம் கூறுகிறது.**
- **உலக சுகாதாரத் தரத்திலும் இந்தியாவின் இடம் 42 ஆக தாழ் நிலையிலுள்ளது.**

ஆக மனித வள மேம்பாட்டுக்கான, வாழ்வாதார பொருளாதாரக் குறியீடு என அனைத்து நிலைகளிலும் தாழக் கிடக்கிறது இந்தியா.

இதற்குக் காரணமான மோடி, மீண்டும் 3 ஆம் முறை பிரதமர் ஆனால் இந்தியா நிலை இன்னும் மிகவும் மோசமாகும் என்பதே மோடியின் கடந்த 2 ஆட்சிகள் உணர்த்தும் பாடம்.அதன்பின், இந்தியாவை யாராலும் காப்பாற்றவே முடியாது.

அதற்கு இடங்கொடா வண்ணம் மோடி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க, மக்கள் தயார்படுத்த வேண்டியது உடனடிக் கடமை என உணர்வோம். அதன்வழி களப்பணி ஆற்றுவோம்.

தொடர்புக்கு: 94431 20051

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30.11.1932

மறைவு 06.01.2022

தோழர் ம.அ. அண்ணாமலை

நீங்கள் நினைவுகளை நிறுத்திக் கொண்ட போதிலும்
என்றும் நீங்கா நினைவுகளுடன்
இதயம் கனத்த நினைவஞ்சலி

மகன்கள், மருமகள்கள், பேரன், பேத்திகள்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
மருதூர் (ராமநாதபுரம் கிளை) கோயமுத்தூர்.



அருண் நெடுஞ்செழியன்

## அடித்தள மக்களை காவி மயமாக்கும் இந்துத்துவ பாசிசம்!



# ஜனநாயக அமைப்புகள் செய்ய வேண்டியது என்ன?

**பார்ப்பன மற்றும் உயர்சாதியினரின் கட்சியாக கருதப்பட்ட பாஜக, மிகப் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடி மக்களிடம் பெற்று வரும் ஆதரவு இந்திய ஜனநாயகத்திற்கு ஆபத்தான பண்பு மாற்றமாகும்.**

வளர்ந்துவரும் சமூகம் பற்றிய ஆய்வு மையம் (CSDS) என்ற அமைப்பானது, அண்மையில் நடைபெற்ற ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சட்டீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களின் சட்டமன்ற தேர்தல் குறித்து ஆய்வு செய்து முடிவுகளை வெளியிட்டுள்ளது. அதில், பட்டியல் சாதிப் பிரிவினரும் பழங்குடிகளும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளை சேர்ந்தவர்களும் பாஜகவை ஆதரித்து வாக்களித்துள்ளதை சுட்டிக்காட்டுகிறது. மேல்தட்டு மக்களின் கட்சி என அழைக்கப்பட்டு வந்த மதவாத பாஜக, தற்போது அடித்தள மக்களின் ஆதரவை பரவலாகப் பெற்றிருப்பதை இந்த ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. பாஜகவின் இந்த வளர்ச்சி இந்திய ஜனநாயகத்திற்கு ஆபத்தான பண்பு மாற்றமாகும்.

இந்துத்துவ பாசிசம் என்று அழைக்கப்படும் பார்ப்பனிய மேல்தட்டு சிந்தனைகளை சித்தாந்தமாக கொண்டுள்ள ஆர்எஸ்எஸ், பெரும்பான்மை மக்களை ஆட்சி செய்வதற்கும் சமூக மேலாண்மைக்கு உடன்பட வைப்பதற்கும் சில தந்திரங்களை கையாள்கிறது.

பாஜகவின் மீதான பார்ப்பனிய, உயர்சாதி முத்திரையை அகற்றுவதற்கும், பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக காட்டுவதற்கும் 2014 ஆம் ஆண்டில் மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவித்தது. அவரை முன்னிறுத்தி திட்டமிட்ட தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டது.

இந்த உத்தியின் தொடர்ச்சியாக அடித்தள மக்களின் ஆதரவை அறுவடை செய்ய, பழங்குடி வகுப்பை சேர்ந்த முர்முவை இந்தியாவின் குடியரசுத் தலைவராக்கியது.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் இந்த தந்திரங்கள் கைமேல் பலன்களை கொடுத்து வருவதை காண முடியும். உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், அரியானா, சட்டீஸ்கர் போன்ற வடமாநிலங்களில் பாஜக வலுவான அரசியல் சக்தியாக மாறி இருக்கிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட இந்த மாநிலங்களில் பட்டியல் சாதியினரும் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் அதிகமாக வாழ்கின்றனர். கடந்த இருபது ஆண்டுகளாக பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் பண்டிகைகள் மூலமாக இம்மக்களின் ஆதரவைப் பெற்று பாஜக வளர்ந்துள்ளது.

பாஜக அடித்தள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு மூன்று வழிகளை கையாள்வதாக பேராசிரியர் ஹரிஷ் வாங்கடே கூறுகிறார்.



முதலாவதாக, சமூக நலத்திட்டங்கள் மூலமாக அடித்தள மக்களை கவர்வது. அதாவது வங்கிக் கடன் தள்ளுபடி, பெண்களை மையப்படுத்திய திட்டங்கள், இலவச திட்டங்கள், இலவச உணவு தானியங்கள் போன்ற திட்டங்கள் மூலமாக எந்த சாதிப் பிரிவினராக இருந்தாலும், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு இத்திட்டங்களை கொண்டு சேர்ப்பதன் மூலம், அவர்களின் ஆதரவைப் பெறுவது.

இரண்டாவதாக, இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் பொருளாதார நலன்களை உறுதி செய்கிற வகையில் சிறப்பு இட ஒதுக்கீட்டு சட்டத்தை உருவாக்கிக் கொடுப்பது. உதாரணமாக உத்தர பிரதேசம் மற்றும் பீகாரில் யாதவ சமூகப் பிரிவினரை கவரும் வகையில் பாஜக இந்த தந்திரத்தை கையாண்டது.

மூன்றாவதாக, சாதிப் பெருமிதம், ஆண்ட சாதி பெருமை, மதவாத நிகழ்ச்சிகள் என சாதிய மதவாத உணர்வுகளை தூண்டிவிட்டு ஆதரவை பெறுவது.

இந்த உத்திகளை நாடு முழுவதிலும் பாஜக பயன்படுத்தி வருவதை பார்த்து வருகிறோம். குறிப்பாக அத்வானியின் ரத யாத்திரை, அதைத் தொடர்ந்த பாபர் மசூதி இடிப்பு போன்ற அடுத்தடுத்த இந்துத்துவ பாசிச நிகழ்வுகளை உற்று நோக்கினால் கடந்த இருபது, முப்பது ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ், பாஜக எந்தளவுக்கு பார்ப்பனர் மற்றும் உயர்சாதி இந்துக்கள் அல்லாத பிற சமூக பிரிவினர்களை தங்களது சித்தாந்தத்திற்கு அணிதிரட்டி செல்வாக்கு பெற்று வருகிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.



பண்பாட்டு அரங்கில் அடித்தள மக்களின் கவனத்தை திசைதிருப்பி ஆதரவைப் பெற்றாலும் அரசியல் மற்றும் பொருளாதார அரங்கில் இன்னும் உயர்சாதியினரின் செல்வாக்கு மேலோங்கி இருப்பது பாஜகவின் செயல்தந்திரத்திற்கு முட்டுக்கட்டையாக உள்ளது. குறிப்பாக, நாடெங்கிலும் பட்டியல் சாதியினரும் பழங்குடிகளும், இதர பிற்படுத்தப்பட்ட சாதியினரும் எதிர்கொள்கிற சமூக ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார நெருக்கடிகள் போன்றவை பாஜகவிற்கு பெரும் சவாலாக முன் நிற்கின்றன.

இந்தப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு மற்றொரு தந்திரத்தை பாஜக கையாண்டு வருகிறது. அதாவது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிப் பிரிவை சேர்ந்தவர்களை மாநிலத் தலைமை பொறுப்பிற்கோ, முக்கிய பதவியிலோ அமர்த்தி சரிக்கட்டப் பார்க்கிறது. உதாரணமாக ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் பாஜகவின் தலைவராக இல.கணேசன் போன்றவர்கள் இருந்த காலம் மாறி, தமிழிசை சௌந்தரராஜன், எல்.முருகன், அண்ணாமலை என தலைமை மாற்றம் நடந்துள்ளது.

இவ்வாறு பாஜக எவ்வளவுதான் பார்ப்பனர் அல்லாத இதர பிற்படுத்தப்பட்ட சமூக மக்களை ஏமாற்றுத் தந்திரங்கள் மூலமாக தன்வயப்படுத்த முயன்றாலும், கிராமங்களில் நிலமற்ற ஏழைக் கூலி தொழிலாளர்கள், நகர்ப்புற தொழிலாளர்கள், வேலை வாய்ப்பின்மை போன்ற பொருளாதார சிக்கல்கள் பாஜகவிற்கு பெரும் சவாலாக உள்ளன. உதாரணமாக பட்டியல் பிரிவு மக்கள் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் நாடெங்கிலும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற பிரிவினராக இருக்கின்றனர். அண்மையில் பீகாரில் மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு இந்த நிலைமையை எடுத்துக்காட்டியுள்ளது. இத்தகைய பொருளாதார பிரச்சனைகள் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் எதிரொலிக்கும் என்பதை பாஜக அறிந்துள்ளது. எனவே தான் சட்டீஸ்கர் மற்றும் மத்திய பிரதேசத்தில் முதலமைச்சராக பின்தங்கிய சமூகப் பிரிவை சேர்ந்த விஷ்ணு தியோ மற்றும் மோகன் யாதவ் போன்றோரை முதலமைச்சராக்கி உள்ளது. இவ்வாறு நியமிப்பதன் மூலமாக பின்தங்கிய சமூகப் பிரிவினரின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதாக காட்டிக்கொண்டு அம்மக்களின் சமூக உயர்வுக்கு பாடுபடுவது போல ஒரு மாயையை உருவாக்குகிறது. ஆனால் எதார்த்தத்தில் இது மட்டும் போதாது.

மத்திய பிரதேசம் மற்றும் சட்டீஸ்கரில் மக்கள் தொகையில், பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடிகள் மட்டுமே சுமார் 40 விழுக்காடு உள்ளனர். ஆனால், அமைச்சரவை பொறுப்புகள் போன்ற அரசியல் உயர் பொறுப்புகளில் இம்மக்களின் பங்கேற்பு மிகவும் சொற்பமாகவே உள்ளது. இப்பிரிவினர் தற்போது தொழில் முனைவோராக, உயர்கல்வி கற்றோராக முன்னேறி வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தில் முக்கியத்துவம் வழங்கவில்லை என்றால் சிக்கல்தான்.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை தன்வயப்படுத்த ஆர்.எஸ்.எஸ் இயக்கமும் பாஜகவும் என்னதான் முயன்றாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்கும் எந்தத் திட்டமும் நோக்கமும் கொள்கையும் அதனிடம் இல்லை. அதனால்தான் பாஜக, ஆர்.எஸ்.எஸ் அமைப்புகள் எப்போதுமே மண்ணுலகப் பிரச்சனையை விண்ணுலக பிரச்சனையாக திசைதிருப்புவதில் அதிக அக்கறை கொள்கின்றன. நமது சமகால மண்ணுலக பிரச்சனை என்ன?

பெட்ரோல் டீசல் விலை உயர்வு, வேளாண் பொருளாதார வீழ்ச்சி, வேலைவாய்ப்பின்மை, உள்ளிட்ட அன்றாட மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களுக்கு இந்த அரசு என்ன செய்துள்ளது?

பொதுத்துறை நிறுவனங்களை மேலும் தனியார் மயப்படுத்தியது. கார்பரேட் வங்கி கடன்களை தள்ளுபடி செய்கிறது. ரிசர்வ் வங்கி பணம் சூறையாடப்படுகிறது. அம்பானியின் சொத்து மதிப்பு உயர்ந்துகொண்டுள்ளது.

அடித்தள மக்களின் முதன்மையான பிரச்சனை மண்ணுலக பிரச்சனை. எதிர்க்கட்சிகள் மற்றும் ஜனநாயக இயக்கங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கை பிரச்சனையை மையப்படுத்திய பொருளாதார கோரிக்கைகளை எடுத்துக் கொண்டு பாஜகவின் கார்பரேட் ஆதரவு மக்கள் விரோத கொள்கையை அம்பலப்படுத்த வேண்டும்.

மக்களிடம் இல்லாமையையும் கல்லாமையையும் போக்குவதில் ஜனநாயக இயக்கங்கள் எந்தளவுக்கு போராடுகின்றனவோ, அதைப் பொறுத்தே இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி உள்ளது. மண்ணுலக சிக்கலைத் தீர்க்க விண்ணுலகிற்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. மதம் மக்களின் தனிப்பட்ட விவகாரமாகிவிடும்.

தொடர்புக்கு: 9842391963

# வரலாறு காணாத மழை, வெள்ள



பெ.கணபதி சுப்பிரமணியன்

**இவ்வாண்டு டிசம்பர் 17 ம் நாள். தமிழகத்தின் தென்மாவட்டங்களில் அதிகன மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்த நேரம். இரவு 7 மணியளவில் வழக்கத்திற்கு மாறாக கனமழை பெய்ய துவங்கி, நேரம் ஆக ஆக வலுத்து கொண்டிருந்தது. பத்தரை மணியளவில் சாலைகளில் மழைநீர் ஓட துவங்கியது.**

பெரியளவில் பாதிப்பு வராது என முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் துயில சென்றோம். சுமார் பன்னிரெண்டு மணியளவில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அதன் காரணமாக மழைநீர் அளவு தெரியவில்லை.

மழைநீர் அளவை அணு பொழுதும் பீதியுடன் பார்வையிட்டு கொண்டிருந்தோம். .மழை ஓய்பந்த பாடில்லை. பொழுதுபுலர்ந்த பொழுது அனைத்து பகுதிகளிலிருந்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் இருப்பதை உணர்ந்தோம்.வீட்டை சுற்றி 6 அடி உயரத்திற்கு மழைநீர் வெள்ளம் சூழ்ந்தது. .கோரம்பள்ளம் குளம் உடைந்து நீர்வரத்து அதிகரித்து கொண்டிருந்தது.

வீட்டை சுற்றியிருந்த குடியிருப்பு பகுதிகளிலிருந்து குழந்தைகளுடன் வயோதிகர்களையும் அழைத்துக்கொண்டு குடும்பம் குடும்பமாக வெளியேறிக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நஞ்ச தகவல் தொடர்பு வழியாக தூத்துக்குடி மாநகரம் மழைநீர் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள விபரங்கள் தெரியவந்தது. பின் அத்தகவல்களும் துண்டிக்கப்பட்டு விட்டன. மழை அளவு குறைய துவங்கியது. ஆனா நீர்வரத்து குறையவில்லை. திங்கள் இரவும் பயத்துடன் கடந்தது.

செவ்வாய்கிழமை அதிகாலை முதல் மக்கள் உதவி கரங்களை எதிர் நோக்க ஆரம்பித்தார்கள். மக்கள் பட்ட துன்பம் சொல்லிமாளாது. நிவாரண முகாமில் மக்கள் தஞ்சமடைந்தவர்கள் ஏராளமானவர்கள். வீட்டை விட்டு வெளியேற முடியாதவர்கள் பலர். இயல்பு வாழ்க்கையை புரட்டி போட்டு விட்டது இக்கன மழை.

நிவாரண பணிகள் முழு வீச்சில் நடைபெற துவங்கின புதன்கிழமை முதல். மழைநீர் வரத்து குறைய துவங்கியது. பெரும் ஆபத்திலிருந்து மீண்டு விடுவோம் என்ற நம்பிக்கை துளிர்விட துவங்கியது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநில தலைமை சேதப்பகுதிகளை பார்வையிட ஒரு குழுவாக தூத்துக்குடி வந்தது. அன்றைய தினம் தமிழக முதலமைச்சரும் சேதப்பகுதிகளை பார்வையிட தூத்துக்குடி வந்தார்கள். அரசு இயந்திரங்கள் முழுமையாக ஈடுபட வைக்கப்பட்டன.

வெள்ளிக்கிழமை மின் இணைப்பு வழங்கப்பட்டன. தகவல் தொடர்பு கிடைக்க துவங்கியது. பாளை கோட்டூரில் இருக்கும் தொலைபேசிதுறையில் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள அருமைத் எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்கள் அலைபேசியில் அழைத்து "நன்று கருது" வாட்ஸ்அப் குழு சார்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்து தர வேண்டுகோள் விடுத்தார்கள். நானும் ஒப்புக்கொண்டேன். அதற்கான ஏற்பாடுகளில் மழைநீரில் மிதந்து கொண்டிருந்த த.சுப்பிரமணியன் வீட்டிலிருந்து வெளியேறி வந்து எங்களோடு இணைந்து கொண்டார். அன்றைய தினம் குமரன் நகர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்க பெருந்துணையாக இருந்தவர் த.சுப்பிரமணியன்.அதன்பின் தபால் தந்தி குடியிருப்பு தெற்கு பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு எஸ்.பாலசுப்பிரமணியன் நேரடியாக நிவாரண பொருட்கள் வழங்கினார். அன்றைய தினம் வழங்கப்பட்ட எண்ணிக்கையும். பொருளின் அளவும் மிக குறைவு என்றாலும் நிவாரண பணியில் ஈடுபட்டது எங்கள் மூவருக்கும் நிறைவை தந்தது. எண்ணற்ற மனித நேயம் படைத்தவர்கள் நிவாரண பணிகளில் ஈடுபட்டு மனிதம் மாண்டு போய்விடவில்லை என்பதை நிரூபித்து கொண்டிருந்தார்கள். அரசுஇயந்திரங்களும் அரசு நிர்வாகத்தில் இருக்கும் கட்சியின் அரசியலாளர்களும் நிவாரண பணிகளில் ஈடுபட்டு கொண்டிருந்தது. அவர்களின் செயற்பாடுகளினால் தமிழக அரசு "செயலற்ற அரசு" என்ற வசைமொழி விமர்சனத்திலிருந்து தப்பிகொண்டிருந்தது.

இந்நாள் கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு பொன்னாள். மூன்று தினங்கள் இணைத்து கொண்டாடப்படும் நாள். கட்சியின் துவக்கநாளோடு. தொழிலாளி வர்க்கத் தலைவர் கே.டி.கே.தங்கமணி அவர்களை நினைவுகூரும்நாள். நெல்லை சதி வழக்கில் பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த ஆர்.நல்லகண்ணு அவர்களின் 99வது பிறந்த நாள். முப்பெரும் நாளை கொண்டாட முடியாத சூழலில் "நன்று கருது" வாட்ஸ்அப் குழு மீண்டும் ஒரு வாய்ப்பினை வழங்கியது. எஸ்.பாலசுப்பிரமணியன் நிவாரண பொருட்களை கொண்டு வருவதாக முதல் நாள் அலைபேசியில் தகவல் அளித்ததால் கட்சி அமைப்பு தினத்தை முன்னிட்டு நிவாரண பொருட்கள் வழங்கும் பணியாக திட்டமிட முடிந்தது.



திட்டமிட்டப்படி எஸ்.பாலசுப்பிரமணியன் நெல்லையில் இருந்து நிவாரணப் பொருட்களை கொண்டு வந்தார். சென்ற முறை கொண்டுவந்த பொருட்களின் மதிப்பும் எண்ணிக்கையும் விட இம்முறை கூடுதல். சென்றமுறை வழங்கிய நபர்களை விட இம்முறை கூடுதலாக வழங்குவதற்கு "நன்று கருது" வாட்ஸ்அப் குழு ஏற்பாடு செய்திருந்தது. அக்குழுவிற்கு நன்றி என சொல்வது வெறும் சம்பிரதாய வார்த்தை தான். அதனையும் விட மேலானது அக்குழுவினரின் கருணையுள்ளம்.



கட்டுக்கூலி மூடை தூக்கு சுமை தொழிலாளர் சங்க பொருளாளர் தோழர்முருகேசன் சங்க அலுவலகத்தில் வைத்து நிவாரண பொருட்களை வழங்க ஏற்பாடு செய்திருந்தார். சத்யாநகர் காலனியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த லோடு ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் மாரியப்பன் தலைமையில் வந்திருந்தவர்களுக்கு எஸ்.பாலு நிவாரண பொருட்களை வழங்கினார்.இப்பகுதி மக்களை திரட்டி வருவதற்கு ஏஐடியூசி தூத்துக்குடி மாவட்ட பொருளாளர் அ.பாலசிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த கட்டுக்கூலிமூடைதூக்குசுமைதொழிலாளர் முன்னேற்ற சங்க உறுப்பினர்களின் குடும்பத்தினர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாட்டை சங்க பொருளாளர்முருகேசன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட K.V.K.சாமிநகர்மக்களை அப்பகுதி கிளைச் செயலாளர்.அண்ணாதுரை அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.இப்பகுதி மக்கள் இன்னும் தங்களுடைய குடியிருப்புக்கு செல்லமுடியாமல் நிவாரண முகாமில் தங்கி இருக்கிறார்கள். இவர்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

குமரன்நகர் பகுதியில் வாழும் கட்டுமான தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாட்டினை த.சுப்பிரமணியன் ஏற்பாடு செய்திருந்தார்.

அடுத்து சகாயமாதா பட்டணம் 5வது தெருவில் இன்னும் வெள்ள நீர் வடிய வில்லை. அத்தெருவிலுள்ள ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிற்கும் சென்று நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு வீட்டிற்கும் நிவாரண பொருட்கள் வழங்க திருமதி.இந்துமதி சுப்பிரமணியன்






# த்தில் தூத்துக்குடி





அவர்கள் மிகுந்த உணர்வோடும் ஈடுபாட்டுடன் செயலாற்றியதை மறக்க இயலாது. .அவ்வாறு வழங்கும் பொழுது ஒருவீட்டிலிருந்த மூதாட்டி நிவாரண பொருளை வாங்க முன் வந்த பொழுது த.சுப்பிரமணியன் கொடுக்க வேண்டாம் என தடுத்தார். அம்மூதாட்டி விடவில்லை. கம்யூனிஸ்ட்கள் வழங்கும் பொருளை வாங்க எனக்கு தான்டா தகுதி இருக்கு. நீ எப்படி தடுப்பே. என முட்டுக்கொடுத்தார். எங்களுக்கு ஒரே வியப்பு. எஸ்.பாலுவோ த.சுப்பிரமணியன் உணர்வையும் மீறி நிவாரண பொருட்களை வழங்கினார். நிவாரண பொருளை பெற்றுக்கொண்ட மூதாட்டி அப்பொருளை கண்ணில் ஒற்றிக்கொண்டு பெருமிதத்தோடு பார்த்த பார்வை. .இன்னும் விழிகளிலிருந்து அகல மறுக்கிறது.

பெருமிதத்தோடு நின்ற மூதாட்டியிடம். உங்க பெயர் என்ன வினாவினோம். கஸ்தூரி என்றார்கள். உங்க கணவர் பெயர் என்ன என்றோம். பெருமிதத்துடன் “தோழர்” என விழித்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். ஜனசக்தி தான் அவருக்கு வேதநூல். படிப்பதோடு மட்டுமல்லாது உடன் பணியாற்றிய தொழிலாளர்களுக்கும் குடியிருந்த பகுதி மக்களுக்கும் ஜனசக்தி வாங்கி விநியோகம் செய்வார்கள் என்றார்கள். அவர்கள் எங்கு வேலை பார்த்தார்கள் என்று வினாவ. அதற்கு அவர்கள். ஆறுமுகநேரியில் உள்ள” தாரங்கதாரா கெமிக்கல் கம்பெனி (DCW) யில் தொழிலாளியாக பணிபுரிந்தார். கம்யூனிஸ்ட் கட்சியில் தீவிரமாக செயல்பட்டார்.

காங்கிரஸ் கட்சி பிரமுகர் செல்வராஜ் (பின்னாளில் திருச்செந்தூர் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டவர். உப்பு உற்பத்தியாளர் சங்க தலைவராக இருந்தவர்) நிர்வாகத்திடம் வாயிலில் செங்கொடியை ஏற்றியவர் இவர் தான் அடையாளம் காட்டினார். செங்கொடியை ஏற்றிய காரணத்திற்காக நிர்வாகம் இவரை வேலை யை விட்டு நீக்கியது. வேலையை துச்சமென எண்ணினார்.கட்சி தான் பெரிது என கருதினார்.DCW நிர்வாக நடவடிக்கையை கண்டு துவண்டு விடவில்லை. சோர்வடைய வில்லை. கடைசி மூச்சு வரை கட்சியின் பால் உறுதியோடு இருந்தார். குடும்பத்தினர் மத்தியில் கட்சி மீதோ செங்கொடி இயக்கத்தின் மீதோ வெறுப்பு ஏற்படாதவாறு பார்த்துகொண்டதோடு தனது சந்ததியினர்களிடமும் கட்சியின் மீதான இயக்கத்தின் மீதான பற்றினை ஊட்டி வளர்த்தார். இவர்தான் அவர் என அவரது கணவரின் நிழற்படத்தை காண்பித்து கண்கலங்கினார். அவர் வேறு யாரும் அல்ல. இவன் அப்பா தான் என த.சுப்பிரமணியனை சுட்டிக் காட்டினார்கள். தகப்பனை போலவே இவனும் வீடுவீடாக ஜனசக்தி நாளிதழை அதிகாலையில் போட்டுட்டு வருவான் என்றார். தூத்துக்குடி நகரச் செயலாளராக நான் பொறுப்பேற்று இருக்கும் பொழுது ஜனசக்தி நாளிதழ் விநியோகத்தில் த.சுப்பிரமணியன் பங்களிப்பு கண் முன் நிழலாடி சென்றது. திருமதிஇந்துமதிசுப்பிரமணியன் மாமனாரின் பெருமை நினைவு கூர்ந்தார். அவரும் மாமனார் பெயரை கூறாமல்” தோழர் “என்றே விழித்தார்.

முப்பந்தைந்தாண்டுகளுக்கு மேலாக தோழமை பூண்டுள்ளேன். சுப்பிரமணியனுக்கு இப்படியொரு பின்புலம் இருப்பதை அறியாமல் இருந்தது என்னுள் வெட்கம் பீறிட்டு எழுந்தது. தோழர் அவர்களும் தனது தகப்பனார் பற்றியோ அரசியல் பின்புலத்தை பற்றியோ கூறி கேட்டதில்லை. அதனை சாதகமாக அவர் பயன்படுத்தியதும் இல்லை. தந்தையை போலவே அவரும் கட்சியில் பிடிப்புடன் செயல்படுபவர் என்பதை மட்டும் அனைவரும் அறிவர்..

தங்க வேலாயுதம் DCW தொழிற்சாலை ஏற்றி வைத்த செங்கொடி இன்றும் பட்டொளி வீசி பறந்து கொண்டிருக்கிறது..அக்கொடிக்கு இப்படியொரு வரலாறு புதைந்து கிடக்கிறது என்கிற விபரம் இன்றைய அமைப்பு தினத்தில் தோழியர்.கஸ்தூரி தங்க வேலாயுதம் வாயிலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி பெருமை கொள்கிறோம். ஆம் தோழர்களே செங்கொடி என்றும் தாழாது. தங்க வேலாயுதம் போன்ற எண்ணற்ற தோழர்களின் தியாகங்களால் தமிழகம் முழுவதும் ஏற்றி வைக்கப்பட்ட செங்கொடி கள் நூற்றாண்டை தாண்டியும் பட்டொளி வீசிக்கொண்டிருக்கும். ஏற்றி வைக்கப்பட்ட செங்கொடி என்றும் தாழாது.. இன்றைய அமைப்புதினத்தில் உணர்வுபூர்வமாக தெரிந்துகொண்ட வரலாறை போல் தமிழகத்தில் பட்டொளி வீசும் செங்கொடிகளுக்கு பின்னால் உள்ள வரலாற்றை பதிவு செய்து தொகுக்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது

**பெ.கணபதி சுப்பிரமணியன்**
**வழக்கறிஞர்**
**தூத்துக்குடி.**

தென்மாவட்டத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை

## இரா.முத்தரசன் நேரில் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு ஸ்ரீவைகுண்டம், ஏரல், ஆத்தூர், சொக்கப்பள்ளம் கரை போன்ற நான்கு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு பெரும் சேதத்தை விளைவித்துள்ளது. அதேபோன்று மாவட்டத்தின் மிகப்பெரிய குளங்களான தென்கரைக்குளம், கடம்பா குளம் போன்று பத்து குளங்களில் உடைப்பு ஏற்பட்டு உள்ளதுஇதனால் ஆறாயிரம் ஏக்கர் வாழைகள், நாலாயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் ஏழு கண்மாய்கள், எட்டயபுரத்தில் இரண்டு கண்மாய்கள், விளாத்திகுளத்தில் இரண்டு கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டு புஞ்சை பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மக்காசோளம், சூரியகாந்தி, பாசிப்பயிறு, உளுந்து, மிளகாய், மல்லி, பருத்தி என விவசாயத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது .

இதனை அறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் தி.ராமசாமி, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கா. மாரிமுத்து, தூத்துக்குடி மாவட்ட செயலாளர் பி. கரும்பன், மாவட்ட துணை செயலாளர் பாலமுருகன், பாபு, பொன்னுசாமி, கண்ணம்மா, பரமராஜ் ஆகியோர் சேதங்களை பார்வையிட்டனர்.

நெல்லை: நெல்லை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், மக்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர். முத்தரசன், துணைச் செயலாளர் என்.பெரியசாமி, திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க. மாரிமுத்து, நெல்லை மாவட்ட செயலாளர் ஆர். சடையப்பன், தென்காசி மாவட்ட செயலாளர் இசக்கி துரை, விருதுநகர் மாவட்ட செயலாளர் ராமசாமி, முன்னாள் எம்.எல்.ஏ க்கள் எஸ். வி .கிருஷ்ணன், பொன்னு பாண்டியன், ஏஐடியுசி மாவட்ட துணை தலைவர் ஆர். ரெங்கன், துணைச் செயலாளர் முத்துகிருஷ்ணன், பொருளாளர் முருகன் மற்றும் ஷேக், சுந்தரம், அணைவீரக்கண்ணு, ராமமூர்த்தி, சமுத்திரக்கனி, வி. பரமசிவன், ஏ. முத்துகிருஷ்ணன், பாலு உட்பட தோழர்கள் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதலையும் தெரிவித்தனர்.

விருதுநகர்: விருதுநகர் மாவட்டம் திருச்சுழி பகுதிகளில் பெய்த கனமழையால் பரளச்சி பெரியகண்மாய் உடைந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் புல்லாநாயக்கன்பட்டி, மேலையூர், பரளச்சி, வடக்குநத்தம், செங்குளம் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 45000 ஏக்கர் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின. வடக்குநத்தம் காலனிபகுதியில் 50ஆடுகள் வெள்ளத்தில் சிக்கி பலியாயின.

இதனை அறிந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தலைமையில் வெள்ள சேதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். விவசாயிகள் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட இரா.முத்தரசன் “ இப்பகுதி மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் கம்யூனிஸ்ட் கட்சி செய்யும். முதலமைச்சரிடம் பேசி அனைத்து பாதிப்புகளுக்கும் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் நம்பிக்கயுடன் இருக்க வேண்டும்“ என்றார். அவருடன் மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் வை.சிவபுண்ணியம், திஇராமசாமி, மாரிமுத்து எம்எல்ஏ, பொன்னுபாண்டியன், பாலமுருகன் உள்ளிட்டோர் இருந்தனர்.

## தாமிரவருணி உபரி நீர் வறண்ட பகுதிகளுக்கு திருப்பும் திட்டம்

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாட்டின் தென்பகுதியில் பெய்த கனமழையால் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் கடுமையாக பாதித்துள்ளன.

இது போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் எதிர்பாராது வரும் உபரி தண்ணீரை வறண்ட பகுதிகளுக்கு திருப்பி விடும் முயற்சியில், தாமிரவருணி ஆற்றின் கன்னடியன் கால்வாயில் இருந்து கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளுடன் இணைத்து வறண்ட பகுதிகளுக்கு 765 மில்லியன் கன அடி திருப்பும் திட்டம் முந்தைய கலைஞர் ஆட்சியில் (2000) ஆம் ஆண்டு அறிவித்தது, அது, தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் மூலம் தற்போது தாமிர வருணியின் உபரி நீரை திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளுக்கு திருப்பி விட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் இத்திட்டத்தை வரவேற்பதுடன், இதே போல் தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் மழைக் காலங்களில் கிடைக்கும் உபரி நீரை பயன்படுத்தும் திட்டங்களை உருவாக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சத்தியமங்கலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 99வது அமைப்பு தின விழா





# அமோனியா வாயு கசிவு: உரத்தொழிற்சாலையை மூட ஆணை






எண்ணூர் அருகே பெரியகுப்பத்தில் உள்ள கோரமண்டல் உரத் தொழிற்சாலை உள்ளது. டிசம்பர் 26, நள்ளிரவு 12 மணியளவில் திடீரென வாயுக்கசிவு ஏற்பட்டது. இதனால் தொழிற்சாலைக்கு அருகில் வசித்து வந்த பொதுமக்களுக்கு மூச்சுத்திணறல், வாந்தி, மயக்கம், கண் எரிச்சல் உள்ளிட்ட உடல் உபாதைகள் ஏற்பட்டன. வாயுக்கசிவால் பாதிக்கப்பட்ட 30க்கும் மேற்பட்டோர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதையடுத்து வாயுக்கசிவு ஏற்பட்ட கோரமண்டல் உரத்தொழிற்சாலையை தற்காலிகமாக மூட தமிழக அரசு ஆணை யிட்டுள்ளது. வாயுக்கசிவு தொடர்பாக ஆய்வுக்குழு தாக்கல் செய்யும் அறிக்கையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதனிடையே கடலில் இருந்து உரத்தொழிற்சாலைக்கு திரவ அமோனியா எடுத்துவரும் குழாயில் அமோனியா வாயு கசிவு ஏற்பட்டிருப்பதை மாசு கட்டுப்பாட்டு வாரியம் உறுதி செய்தது. கசிவு ஏற்பட்ட இடத்தில் ஐ.ஐ.டி. மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஆய்வு நடத்தினர். பின்னர், கோரமண்டல் தொழிற்சாலை நுழைவுவாயிலில், ஐ.ஆர்.எஸ். *(Indian Register of Shipping)* அனுமதி பெறும் வரை தொழிற்சாலை இயங்க கூடாது என உத்தவிட்டு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

# பாஜக, தேர்தல் ஆணையத்தை அடிமையாக மாற்ற மும்முரம்

## தேர்தல் ஆணையம் மீதான மசோதாவுக்கு சிபிஐ எதிர்ப்பு

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் ஆணையத்தின் பிற ஆணையர்கள் (நியமனம், பணி நிலைமைகள் மற்றும் பதவி கால வரம்பு) மசோதா 2023 மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழுச் செயலாளர் பினாய் விஸ்வம், நரேந்திர மோடி தலைமையிலான ஆர்எஸ்எஸ் ஸ்ரீ பாஜக அரசு தேர்தல் ஆணையத்தைத் தனக்கு அடிபணிந்ததாக ஆக்க விரும்புகிறது என்று குற்றம் சாட்டினார்.

டிசம்பர் 11ல் பாஜக உறுப்பினர்கள் உச்ச குரலில் உச்சநீதிமன்றத்தை ஆதரித்த காட்சியை இந்த அவை பார்த்தது. அரசியலமைப்பு சட்டப் பிரிவு 370க்கு ஆதரவான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியபோது, அவர்கள் உச்சபட்ச மரியாதையுடன் உச்சநீதிமன்றத்தைப் புகழ்ந்தனர். வெறும் 24 மணி நேரத்திற்குப் பிறகு அவர்கள், ஆளும் கட்சி கைகளில் தேர்தல் ஆணையத்தை அடிமை செய்யும் கையாளாக மாற்ற உடன்படாத உச்சநீதிமன்றத்தை ஒன்றுமே இல்லை என்று கூறினர். நேற்றைக்குப் புகழ்ந்த வார்த்தைகளை அவர்கள் மறந்து விட்டனர். இதுதான் பாஜக.

அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவையில் மிக விரிவாக மேற்கோள் காட்டப்பட்டார். திமுக உறுப்பினர் திருச்சி சிவா அவரை மேற்கோள் காட்டி, அரசியலமைப்பு நிர்ணய சபை அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைப்பதற்காகவே அமைக்கப்பட்டது என்று கூறினார். ஆட்சி நிர்வாகப் பிரிவின் கட்டுப்பாடு மற்றும் தலையீட்டிலிருந்து சுதந்திரமானதாகவும் தேர்தல் ஆணையம் இருக்க வேண்டும் என்பதே அதன் கருத்து. சாதாரணமாக அவர்கள் ஹிட்லரின் காலடித் தடங்களைப் பின்பற்றுபவர்கள். ஹிட்லர், நாடாளுமன்றத்திற்கு முழுமையான அவமரியாதை உடையவன்.

1930களில் ஹிட்லர் ஜெர்மன் நாடாளுமன்றமான ரிச்ஸ்டாக் அவையையே தடை செய்தான். இன்று இந்த நபர்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்தைச் சீர்குலைக்க முயற்சி செய்கிறார்கள். சுதந்திரமான, நியாயமான தேர்தல் அவர்களுக்கு முக்கியமானது அல்ல. அதனால்தான் அவர்கள் பிரதமரால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் பிரதமர் இட்ட உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியும் அதிகாரத்துவ நிர்வாக அதிகாரிகளைக் (பீரோக்ரெட்ஸ்) கொண்டதாகத் தேர்தல் ஆணையத்தை ஆக்க விரும்புகிறார்கள். பாஜகவின் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' கோட்பாடு நாட்டிற்குப் பெரும் நாசத்தை விளைவிக்கப் போகிறது. ஒரே கட்சியே இங்கு அனைத்தும் செய்ய வேண்டும் என்பதை அவர்கள் உறுதிப்படுத்த விரும்புகிறார்கள்.

உள்துறை அமைச்சர் அமித் ஷா, 2018ல் பாஜக ஊழியர்களுக்கான ஓர் அறிக்கையில், "2019 தேர்தலில் வென்றால், பிறகு அடுத்த 50 ஆண்டுகளுக்கு அவர்கள் இந்தியாவைக் கட்டுப்படுத்தி ஆள்வார்கள்" என்று கூறினார். அதற்காகவே, அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்துள்ளனர். தேர்தல் ஆணையத்தை அவர்களுக்கு அடிமைகளாக்க அவர்கள் விரும்புகிறார்கள். எனவே நாங்கள் அதனை எதிர்க்கிறோம்" என்று உறுதிபடக் கூறினார்.

# சின்னாபின்னமாகிக் கிடக்கும் நாட்டின் பொருளாதாரம்

## பினாய் விஸ்வம் எம்பி சாடல்



நாட்டின் பொருளாதார நிலை குறித்த குறுகிய கால விவாதம் மாநிலங்களவையில் டிசம்பர் 6ல் நடைபெற்ற போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு செயலாளரும், கேரளமாநிலச் செயலாளருமான பினாய் விஸ்வம் எம்.பி. பேசியதாவது:

மக்கள் பட்டினி கிடக்கிறார்கள், நமது நாட்டின் வேலையற்ற இளைஞர்கள் வேலை தேடி ஒவ்வொரு கதவாகத் தட்டி அலைகிறார்கள். எனினும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பெரும் பிரயத்தனப்பட்டுப் படம்பிடித்துக் காட்ட விரும்பும் காட்சி, மிகவும் உண்மையற்றது. பொருளாதார இயலில் 'V' வடிவ வளர்ச்சி என்பது பற்றி விளக்குவார்கள். அப்படித்தான் நமது நாட்டின் பொருளாதாரம் விரைவாக மீட்சி அடைந்து வருகிறது என அரசு கூறுவது போல எந்த இடத்திலும் ஒருவர் காண முடியாது.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகளை வழங்குவதாக அளித்த வாக்குறுதி என்னவாயிற்று நாட்டின் அனைத்தும் நன்றாக உள்ளது என அரசு கூறும்போதே, 22.4 கோடி இந்தியர்கள் பசித்துக் கிடக்கிறார்கள் என்பதை அரசு பார்க்கத் தவறக் கூடாது. அரசு பிரச்சாரத்தில் வாழ்கிறது, மிக அருவருப்பான முறையில் பிரச்சாரத்தில் திளைக்கவும் செய்கிறது.

ஒன்றிய அரசின் 'பெண் குழந்தைகளைக் காப்போம், கற்பிப்போம்' திட்டச் செலவில் பெரும் பங்கு, சுமார் 42.3 சதவீதம், பிரச்சாரங்களுக்கு மட்டுமே செல்கிறது. இதுதான் வலதுசாரி அணியினரின் வளர்ச்சி மேம்பாட்டு வழிமுறை, அது ஏழை மற்றும் மக்களை முற்றாக மறந்து விடுகிறது. வலதுசாரி வெறும் பிரச்சாரத்தில் ஜீவிக்கிறது, பிரச்சாரத்தில் பணத்தைச் செலவிடுகிறது. இதுதான் தேசத்தின் இன்றைய உண்மை நிலை.

'பொருளாதாரம் சிதலமடைந்து குப்பையாகக் கிடக்கிறது' 'வேலையின்மை அதிகரிக்கிறது, பசியும் பட்டினியும் பரவலாகிறது, வாழ ஒரு குடிசையின்றி மக்கள் வாழ்கிறார்கள்' அரசின் செயல் திட்டங்கள் பிரம்மாண்டமான பெத்தபேரு உடையன. ஆனால் அதன் பலன்கள்தான் மக்களிடம் கொண்டு சேர்க்கப்படவில்லை.

நாடு சுதந்திரம் அடைந்து 77 ஆண்டுகளை நிறைவு செய்த பிறகும், இன்றும் படிப்பறிவில்லாத மக்களின் எண்ணிக்கை உச்சத்தில் உள்ளது. மேலும் அரை வயிற்று உணவோடு நம் மக்கள் இரவில் உறங்கச் செல்கின்றனர். இந்த நாட்டில்தான் ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இறப்பு மற்றும் இரத்த சோகையால் பாதிக்கப்பட்ட கர்பிணித் தாய்மார்கள் எண்ணிக்கை அதிகபட்சமாக உச்சத்தில் உள்ளன.

இந்தப் புள்ளிவிபரங்களும் விமர்சனக் கருத்துகளும் உலக சுகாதார அமைப்பு (WHO) அறிக்கைகளில் கூறப்பட்டனவாகும். ஆனால் அரசு அத்தகைய உண்மைகளைக் காண மறுத்துக் கண்களை இறுக மூடிக் கொண்டு, பொய்யான பிரச்சாரத்தில் திளைக்கிறது.

இந்த தேசம்தான் விஸ்வகுரு என்று அரசு உலகம் முழுவதும் சொல்லி வருகிறது. ஆனால் அது உண்மையான சித்தரிப்பு அல்ல, மாயங்களால் ஆன, பொய்களும் அரைகுறை உண்மைகளும் கொண்ட, கதையாடல். உலகமே இந்தியாவைக் கவனித்து வருகிறது என்று அரசு பெருமை பேசுகிறது. நாட்டில் மாற்றத்தைக் கோரும் தருணம் வந்து விட்டது. நரேந்திர மோடி தலைமையிலான ஆர்எஸ்எஸ், பாஜக இணையின் அரசு, அதன் சமீபத்திய வெற்றி தற்காலிகமானது என்பதைக் கட்டாயம் உணர வேண்டும். மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகத் திற்காக நிற்கும் நாட்டின் அனைத்துச் சக்திகளும் கரம் கோர்க்கும்போது, ஆர்எஸ்எஸ், பாஜக இணை நிச்சயம் முறியடிக்கப்படும். அதற்கான போராட்டம் ஏற்கனவே தொடங்கி விட்டது.

அதானிகளுக்காகவும் அம்பானிகளுக்காகவும் அரசு ஆதரவாகப் பேசுகிறது. இது அதானி அம்பானி அரசு. அரசு அவர்களின் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி, தேசம் வளர்கிறது என பிரச்சாரப் படத்தைச் சித்தரிக்கிறது. ஆனால் உண்மை யாதெனில், நாட்டின் 7 சதவீத மக்களுக்கு மட்டுமே தேசம் வளர்கிறது என்றார்.

# கீழவெண்மணி தியாகிகளின் 55 ஆம் ஆண்டு நினைவு தினம்



வெண்மணி தியாகிகளின் 55 ஆம் ஆண்டு நினைவு நாளில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ. பழனிச்சாமி, திருவாரூர் மாவட்ட செயலாளர் வை. செல்வராஜ், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் அ.பாஸ்கர், நாகை மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன், விவசாய தொழிலாளர் சங்க நாகை மாவட்ட செயலாளர் கே. பாஸ்கர், திருவாரூர் மாவட்ட செயலாளர் கே. ராஜா, மாதர் சங்க மாவட்ட செயலாளர் மேகலா, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் பாபுஜி, மாவட்டத் தலைவர் சரபோஜி, திருவாரூர் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி. பி. முருகானந்தம், தோழர்கள் பி. சந்திரசேகர், எம். காசிநாதன், ஜே. ஏ. ரகுமான், விதொசா மாவட்ட பொருளாளர் தமிழரசன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் வெண்மணி நினைவு இடத்தில் அஞ்சலி செலுத்தினார்கள்.

**திருவாரூர்:** வெண்மணி தியாகிகளுக்கு வீர வணக்கமும், உறுதிமொழி ஏற்பும் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில், திருவாரூரில் பழைய பேருந்து நிலையம் அருகில் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது. இதில் திருவாரூர் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ் கலந்து கொண்டார்கள்.

உறுதிமொழியினை சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவரும், திருத்துறைப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினருமான கா. மாரிமுத்து முன்மொழிந்தார்கள். இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கே. ராஜா, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஆர்.சந்திரசேகர ஆசாத் உள்ளிட்ட தலைவர்களும், வி.தொ.ச. மாவட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு தோழர்களுக்கு வீர வணக்கம் செலுத்தி உறுதிமொழியும் ஏற்றனர்.

**திருவள்ளூர்:** வெண்மணி தியாகிகள் தின கருத்தரங்கம் திருவள்ளூரில் மாவட்ட தலைவர் வழக்கறிஞர் டி. கே. ராஜா தலைமையில், சங்கத்தின் மாவட்ட குழு உறுப்பினர்கள் வெங்கடேசன், மதி யோவான், ஜி. எம். சம்பத் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், கட்சியின் மாவட்ட துணை செயலாளர் வி. சரவணன், சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் சி. சுப்பிரமணி, மாவட்ட துணை செயலாளர் கே. மதியழகன் எம். பி. குமார் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

**தஞ்சாவூர்:** விவசாய தொழிலாளர்கள் வாழ்க்கை தரம் உயர ஒன்றிணைந்து போராடுவோம்! தஞ்சையில் இன்று நடைபெற்ற வெண்மணி தியாகிகள் 55வது ஆண்டு நினைவு நாளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதி ஏற்பு


தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் எதிரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சி.சந்திரகுமார், வெ.சேவையா, ம.விஜயலெட்சுமி, மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர், மாநகர துணை செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், மாவட்ட குழு உறுப்பினர் பி.குணசேகரன், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் ஆர். ராமச்சந்திரன், பூதலூர் ஒன்றிய செயலாளர் எம்.ஜயாராக, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் துரை.மதிவாணன், மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழக மாவட்ட செயலாளர் பேராசிரியர் கோ.பாஸ்கர், அரசு போக்குவரத்து சங்க பொதுச் செயலாளர் எஸ். தாமரைச்செல்வன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**தர்மபுரி:** தர்மபுரி பி எஸ் என் எல் அலுவலகம் முன் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் சங்க மாவட்ட தலைவரும் மாநில செயலாளருமான ஜெ. பிரதாபன் தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினரும் சங்க மாவட்ட செயலாளருமான எஸ். தேவராசன் தியாகிகள் தின உரையாற்றினார். இதில் ஏஐடியுசியின் மாநில துணைத்தலைவரும் மாவட்ட பொதுச் செயலாளருமான கே மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் எம் மாதேஸ்வரன், சங்க மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஜி. மாதையன், அலமேலு எத்துராஜ், சங்க ஒன்றிய செயலாளர்கள் ஜி. பச்சாகவுண்டர், என். முருகேசன், எம். மாதையன், ஏஐடியுசியின் மாவட்ட துணைத்தலைவர் சுதர்சன், உள்ளாட்சி பணியாளர் சங்க செயலாளர் மனோகரன் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்துக் கொண்டு பேசினார்கள்.

**கரூர்:** தாந்தோணி ஒன்றியம் வீரணம்பாளையத்தில் மாவட்ட துணைத் தலைவர் எஸ். அஞ்சலிதேவி தலைமையில், தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

**விருதுநகர்:** விருதுநகரில் விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் வரதராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ். பழனிக்குமார், சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், ஒன்றிய செயலாளர் சக்கணன், தஒவாஇ மாநில குழு உறுப்பினர் முருகேசன் , திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம் உள்ளிட்டர் கலந்துகொண்டனர். மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

**தென்சென்னை:** இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தென் சென்னை மாவட்ட அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா.தினேஷ், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் எம்.டி.குமார், கட்டுமான சங்கத்தின் மாவட்ட தலைவர் டி.சி.கே.சுந்தரம், மாதர் சம்மேளன மாவட்ட பொருளாளர் எஸ்.காமாட்சி, உசேன், வேலன், பிடல் காஸ்ட்ரோ, இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் வி.வித்யா, மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் ஆ.மணிகண்டன், மாநில குழு உறுப்பினர் ரா.கார்த்திக், மாவட்ட குழு உறுப்பினர் அகிலா ஆகியோர் பங்கேற்றனர்.



# கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பேரிடர் கால நிவாரணம் ரூ.10,000 வழங்குக! ஏஐடியூசி கோரிக்கை

பேரிடர் கால நிவாரணமாக கட்டட தொழிலாளர்களுக்கு நல வாரியம் மூலமாக ரூ 10,000/ வழங்க வேண்டும் என்று ஏஐடியூசி சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இச்சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.இரவி தமிழ்நாடு முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில், "தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் வரலாறு காணாத பெரும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் பேரிடர் மீட்பு பணி நடவடிக்கைகளை துரிதமாக எடுத்து வருகிறது. அதற்கு எங்களது சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கதியாக நிற்கிறார்கள். பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் சகஜ நிலைமைக்கு திரும்பி வர குறைந்தது மூன்று மாதங்கள் ஆகும். எனவே, மேற்கண்ட மாவட்டங்களைச் சார்ந்த கட்டுமான தொழிலாளர்களுக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் மூலம், பேரிடர் கால நிவாரணமாக ரூ 10,000/ வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்" என்று தமிழ்நாடு ஏஐடியு சி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.இரவி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# தந்தை பெரியார் நினைவு தினம்



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50 ஆண்டு நினைவு தினத்தையொட்டி பெரியார் திடலில் உள்ள நினைவிடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

உடன் மூத்த தோழர் எம்.எஸ்.மூர்த்தி,வட சென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணை செயலாளர் எம்.ஜெய்சங்கர், மத்திய சென்னை மாவட்ட துணை செயலாளர் ஆர்.இரஞ்சித், மாநிலக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆ.சுப்பிரமணி, பி.கருணாகரன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் இராஜசேகர், அருள், ஏஐஒய்எப் மாவட்ட துணை செயலாளர் காவிரி செல்வம் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**அரியலூர்:** அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து சுகாதார தொழிலாளர் சங்கம் மாநில செயலாளர் த.தண்டபாணி தலைமையில், சங்க செயலாளர் ரெ.நல்லுசாமி, செ.மாரியப்பன், நாகூரான்,குருசாமி, ரா. தனலட்சுமி, ஆகியோர் முன்னிலையில் 50க்கும் மேற்பட்டோர் தொழிலாளர்கள் ஊர்வலமாக சென்று பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் டி. ராயதுரை, பெ.பார்த்திபன், வால்பாறை மாணிக்கம், மகளிர் குழு மா. நல்லம்மாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோவை மாவட்டம் மதுக்கரை ஒன்றியத்தில்

# மரப்பாலத்தை மேம்பாலமாக உயர்த்தகோரி ஆர்ப்பாட்டம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஒன்றிய குழுவின் சார்பில் கோயம்புத்தூர் பாலக்காடு பிரதான சாலையில் உள்ள ரயில்வே மரப்பாலத்தை அகலப்படுத்தியோ அல்லது உயர் மட்ட மேம்பாலம் அமைத்தோ அன்றாடம் நிகழும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காண ஒன்றிய அரசை வலியுறுத்தி 21/12/2023 ம் தேதி மதுக்கரை குவாரி ஆபீஸ் பேருந்து நிறுத்தம் அருகே கட்சியின் மாநிலப்பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்எம்.எல்.ஏ தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் மாவட்டச்செயலாளர் சி.சிவசாமி, மதுக்கரை ஒன்றியச்செயலாளர் வழக்குரைஞர் ஜி.பி.சக்திவேல், பொருளாளர் கே.ஆர்.தங்கராஜ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் பி.இளங்கோ, முத்துக்குமார், கோயம்புத்தூர் சிமெண்ட் தொழிலாளர் சங்கத் தலைவர் எம்.திருமூர்த்தி, பொருளாளர் வெள்ளிங்கிரி, துணைத் தலைவர் ஸ்டாலின் பாலன், ஆட்டோ டெம்போ டாக்சி சங்க மாவட்ட பொதுச் செயலாளர் வெங்கடாசலம், ஏஐடியூசி மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.ஆறுமுகம், செல்வராஜ், ஃபாருக் சேட், அறிவொளி நகர்2 கிளைச் செயலாளர்ஆர்.மணிவண்ணன், என்.எப்.ஐ.டபிள்யு மாவட்டக்குழு உறுப்பினர் ஈஸ்வரி, ஒன்றிய துணைத் தலைவர் ஜெஸினா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# தஒவாஇ 2024 தினசரி காலண்டர் வெளியீடு



சென்னையில் நடைபெற்ற தலித் உரிமைகளுக்கான உச்சி மாநாட்டில், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் விருதுநகர் மாவட்டம் சார்பில் 2014 தினசரி காலண்டர் வெளியிடப்பட்டது. தலித் உரிமைகள் இயக்க அகில இந்தியத் தலைவர் அ.ராமமூர்த்தி வெளியிட, அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க பொதுச் செயலாளர் வெங்கட் பெற்றுக் கொண்டார். தவிதொச மாநில தலைவர் நா.பெரியசாமி எக்ஸ் எம்எல்ஏ, தஒவாஇ மு.வீரபாண்டியன், பி.லிங்கம் எக்ஸ் எம்பி, பத்மாவதி எக்ஸ் எம்எல்ஏ, எஸ்.கே. சிவா, எஸ்.பழனிக்குமார், உதயா, சுகுமார், முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மிக்ஜாம் புயல் நிவாரண நிதி



கோவை மாநகராட்சி செம்மொழி பூங்கா சம்மந்தமாக அவசர கூட்டம் மேயர்கல்பனா ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. அதில், கோவை மாநகராட்சி மேற்கு மண்டல 41வது வார்டு மாமன்ற உறுப்பினரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினருமான கே.சாந்தி சந்திரன் “மிக்ஜாம் புயல் முதலமைச்சர் நிவாரண நிதி”யாக தனது ஒரு மாத ஊதியமான ரூ.10,000 த்தை வழங்கினார்.

## மணப்பாறை சொக்கலிங்கபுரத்தில்

# அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சி.பி.ஐ. கோரிக்கை

மணப்பாறை நகராட்சி ஐந்தாவது வார்டில் உள்ள சொக்கலிங்கபுரத்தில் தூய்மை பணியாளர்கள் குடியிருப்பு பகுதியில், அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க நகர்மன்ற தலைவரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிசார்பில், நகர செயலாளர் ஜனசக்தி உசேன், கிளை செயலாளர் களிமுத்து, ஏஐடியூசி அருணகிரி ஆகியோர் கோரிக்கை மனுவை கொடுத்தனர்.

அம்மனுவில் மணப்பாறை நகராட்சி ஐந்தாவது வார்டில் உள்ள சொக்கலிங்கபுரம் கலனி குடியிருப்பு பகுதின் அருகில் உள்ள மோர்குளத்தையும், மழைநீர் மற்றும் கழிவு நீர் செல்லும் வழித்தடத்தை தூர்வாரவும், குடியிருப்பு பகுதியில் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்கவும், 20 ஆண்டுகளுக்கு முன் பதிக்கப்பட்ட காவிரி குடிநீர் பைப்பை புதுப்பித்து குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிவுள்ளனர்.

# வடசென்னை ஐ.சந்துரு படத்திறப்பு நிகழ்வு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 37 வது வட்ட கிளை உறுப்பினர், முன்னணி தோழர் எஸ். சீனிவாசன் அவர்களின் மைத்துனர் ஐ.சந்துரு படத்திறப்பு நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்ட செயலாளர் த. கு. வெங்கடேஷ் வேம்புலி படத்தை திறந்து வைத்தார்.

பெரம்பூர் பகுதி செயலாளர் இரா. கோட்டி சுரேஷ், 35 வது வட்ட கிளைச் செயலாளர் செல்வராஜ், 46வது வட்ட கல்யாணபுரம் செயலாளர் நாகராஜ், கென்னடி நகர் கிளை துணை செயலாளர் வெங்கடேஷ், மனோகரன், மூர்த்தி, கண்ணன் ஏஐஎஸ்எப் மாவட்டத் தலைவர் தோழர் இரா. ராமசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வடசென்னை வியாசர்பாடி

# சிற்றரசு மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை பெரம்பூர் தொகுதியைச் சார்ந்த சத்தியமூர்த்தி நகர் 46 வது வட்ட கிளையின் முன்னணி உறுப்பினர் ஏ.எஸ்.கே மன்றத்தை கட்டுவதற்கு மிகவும் உழைத்த தோழர்களில் ஒருவர் சிற்றரசு, மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார்.

அவருடைய உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன், வடசென்னை மாவட்ட செயலாளர் த. கு. வெங்கடேஷ் வேம்புலி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வில் பெரம்பூர் தொகுதி செயலாளர் இரா கோட்டி சுரேஷ், மாநில குழு உறுப்பினர் லீ உதயகுமார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் செண்பகம், கருணாகரன், மாவட்ட குழு உறுப்பினர்கள் அருள், பாஸ்கர் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

## வினாடி - வினா விடைகள்

1. சிங்காரவேலர்
2. இந்துஸ்தான் தொழிலாளர் விவசாயிகள் கட்சி
3. 1934 ஆம் ஆண்டு
4. சுமேரியன் நாள்காட்டி (5000 ஆண்டுகளுக்கு முன்)
5. தலித் மக்கள் பொதுக்குளத்தில் நீர் எடுக்கும் உரிமை கோரி நடத்தினார்
6. ஐ.நா. பாதுகாப்பு சபை (Security Council)

# எம்.பி.க்கள் இடைநீக்கத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




**சிவகங்கை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நாடாளுமன்றத்தை பாதுகாக்க தவறிய பாரதிய ஜனதா கட்சியை கண்டித்தும், 15 எம்பிக்களை இடைநீக்கம் செய்த பாசிச பாஜக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நகரச் செயலாளர் சிவாஜிகாந்தி தலைமையில் நடைபெற்றது.

இதில் ஏஐடியுசி உள்ளாட்சித் துறை மாநில துணைத்தலைவர் பி. எல். ராமச்சந்திரன், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் ரிச்சர்ட், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ராஜா மற்றும் கிளை செயலாளர்கள் பழனியம்மாள், மெய்யர் உட்பட 30 தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கு பெற்றனர்.

**திருப்பூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாவட்ட குழுவின் சார்பில் குமரன் சிலை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புறநகர் மாவட்ட குழு செயலாளர் கே.எம். இசாக் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, மாநகர் மாவட்ட குழு செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் எம்.சி. உள்ளிட்ட தோழர்கள் ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினர். ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் மாநகர துணை மேயர் ஆர். பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், திருமுருகன்பூண்டி நகரமன்ற துணைத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள், ஏஐடியுசி மாவட்ட நிர்வாகிகள், மண்டல குழு செயலாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**மத்திய சென்னை:** அம்பத்தூர் ஓ.டி. பஸ் நிலையம் அருகே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் இரா. விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு ஏஐடியுசி மாநில துணைத்தலைவர் ஏ. எஸ். கண்ணன் எக்ஸ் எம்.எல்.ஏ, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா. கருணாநிதி, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் சங்க மாநில செயலாளர் ஆர். துரைசாமி, மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளர் ப. மாரியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினார். ஆர். லோகநாதன் நன்றியுரை கூறினார். ஆர்ப்பாட்டத்தில் நாச்சியப்பன், இராமதாஸ், மாணிக்கவள்ளி, இயேசு, ரவிச்சந்திரன், கேசவன், சுஜாதா, என். கோபிநாதன் மற்றும் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

# எண்ணூர் காமராஜர் துறைமுகத்தில் மூரிங் தொழிலாளர்கள் குடும்பத்துடன் முற்றுகை




திருவள்ளூர் மாவட்டம் எண்ணூரில் காமராஜர் துறைமுகத்தில் மூரிங் தொழிலாளர்கள் ஒப்பந்த தொழிலாளர்களாகவே பணிபுரிந்து வருகின்றனர். சென்னை துறைமுகத்தில் பணி புரியும் நிரந்தர மூரிங் தொழிலாளர்களுக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் சம்பளம் உள்ள நிலையில், காமராஜர் துறைமுகத்தில் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு 17 ஆயிரம் மட்டுமே வழங்கப்படுகிறது.

சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும், ஒப்பந்தத்திற்கான டெண்டர் முறையை தவிர்க்க வேண்டும், பணி நிரந்தரம் செய்ய வேண்டும், ஊதிய உயர்வு, இ எஸ் ஐ, பி எப் முறையாக அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காமராஜ் துறைமுக வாயிலில் மூரிங் தொழிலாளர்கள் குடும்பத்துடன் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முற்றுகைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் பொதுச் செயலாளரும் ஏ ஐ டி யூ சி மாநில செயலாளருமான கே. இரவி தலைமை தாங்கினார். காமராஜர் துறைமுக தொழிலாளர் கிளை சங்கத்தின் தலைவர் சம்பத், செயலாளர் எம்ப்ரோஸ், பொருளாளர் பிரேம்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு ஏ ஐ டி யு சி துணை தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஏ எஸ் கண்ணன், மீஞ்சூர் பாலன், கும்மிடிப்பூண்டி அருள், திருவள்ளூர் மாவட்ட ஏ ஐ டி யு சி பொருளாளர் பாலகிருஷ்ணா ராவ், கட்டட சங்க மாவட்டச் செயலாளர் பார்த்திபன், ஜுவாரி சிமெண்ட் கிளையின் தனசேகர், பிரபு, உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். துறைமுக நிர்வாகிகளின் அழைப்பின் பேரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 15 நாட்களுக்குள் பிரச்சனைக்கு தீர்வு காண்பதாக நிர்வாகம் தெரிவித்தது.

# மதுரையில் நாற்று நடும் போராட்டம் வெற்றி




மதுரை அனுப்பானடி பகுதியில் பல நாள்களாக சாக்கடை நீர் தேங்கியுள்ளதில் மழை நீரும் கலந்து பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது. இதனை மதுரை மாநகராட்சி சீர்செய்ய மக்கள் கோரிக்கை விடுத்தும், மதுரை மாநகராட்சி கண்டுகொள்ளாத மெத்தன போக்கில் இருந்தது. இதனை கண்டித்து பகுதி மக்களுடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் நாற்று நடும் போராட்டம் நடத்தினர். இந்த பேராட்டத்தில் இந்தியக் கம்யூ., கட்சியின் மாவட்ட துணை செயலாளர் சி.தாமஸ், பகுதி செயலாளர் ரவிச்சந்திரன், துணை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, கிளை செயலாளர் எம்.வீரபாண்டியன், எம்.மகாலிங்கம், மற்றும் ஏஐடியூசி தோழர்கள் டி.எஸ்.ரமேஷ், பாண்டி உட்பட தோழர்களுடன், பொதுமக்களும் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

மதுரை மாநகராட்சி போராட்டத்திற்கு செவி சாய்த்து தேங்கியுள்ள சாக்கடை நீரை சுத்தப்படுத்தி சீர்செய்தனர். மக்கள் கோரிக்கையை வலியுறுத்திய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் வெற்றி பெற்றது.

## பொங்கல் போனஸ் வழங்க வலியுறுத்தி

# உள்ளாட்சி பணியாளர் சம்மேளனம் ஆர்ப்பாட்டம்

தருமபுரி மாவட்ட ஏஐடியுசி முனிசிபல் பஞ்சாயத்து,பொது பணியாளர் சங்கம், ஊராட்சி, பேரூராட்சி, டேங்க் ஆப்ரேட்டர், தூய்மை பணியாளர், தூய்மை காவலர்,பள்ளி தூய்மை பணியாளர் உள்ளாட்சிபணியாளர் சம்மேளனம் சார்பில், பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி ஏரியூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்திற்கு இச்சங்கத்தின் மாவட்டக்குழு உறுப்பினர் சிரங்கன் தலைமை வகித்தார்.தலைவர் ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.ஊராட்சி மன்றத்தலைவர் தொட்டி ஆர்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார்.

ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் கே.மணி,இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக்குழு உறுப்பினர் எம்.மாதேஸ்வரன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எ.ஏ.காதர்,விடுதலைவிரும்பி,ஒன்றிய செயலாளர் விஸ்வநாதன்,கட்டட சங்க மாவட்ட செயலாளர் ஏ.சி.மணி,உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்டத்தலைவர் என்.மனோகரன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

### அதிராம்பட்டினம் பஞ்சாயத்தாரால் ஒதுக்கி வைக்கப்பட்ட

# மீனவர்களை மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும்!

## மீனவத் தொழிலாளர் சங்கம் கோரிக்கை

தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினம் காந்தி நகர் மீனவ கிராமத்தில் மீனவ பஞ்சாயத்தார்கள் சமயமுத்து மகன்கள் சேகர்,முத்துராமு, நாகூரான் மகன் காளிதாஸ், பாலுசாமி மனைவி சத்யா உள்ளிட்ட நான்கு பேரையும் கடலுக்குள் மீன் பிடிக்க செல்ல கூடாது, மீன் விற்பனை செய்யக்கூடாது என்றும், அதேபோல மேற்கண்ட நால்வரையும் ஊரை விட்டு ஒதுக்கி வைத்து, அவர்களுடன் யாரும் பேசக்கூடாது, எந்த பொருளும் கடைகளில் விற்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்தனர்.

பாதிக்கப்பட்ட சேகர்,முத்துராமு ஆகியோர் 4 பேர் சார்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில், மீன் பிடிக்க கடலுக்கு செல்லவோ,மீன்கள் விற்பனை செய்யவோ கூடாதென்ற முடிவும், ஊரை விட்டு ஒதுக்கி வைக்கவோ மீனவ பஞ்சாயத்தார்களுக்கு எந்த வித அதிகாரமும் இல்லை என்றும், பாதிக்கப்பட்டவர்கள் வழக்கம் போல் இயங்கலாம் என்று மதுரை உயர்நீதிமன்றம் மீனவர்களுக்கு சாதகமான தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த தீர்ப்பை அமல்படுத்த வலியுறுத்தி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் தமிழ்நாடு மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.சின்னத்தம்பி, மாவட்ட செயலாளர் என்.காளிதாஸ், நிர்வாகிகள் முத்துராமு, சேகர், ஏஐடியூசி தஞ்சை மாவட்ட செயலாளர் துரை.மதிவாணன் ஆகியோர் தஞ்சை மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.

# பொங்கல் போனஸ் 5000 கோரி அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம்



பாண்டிசேரியில் கட்டுமான தொழிலாளர்களுக்கு தீபாவளி போனசாக ரூபாய் 5000 வழங்கப்பட்டதை போல தமிழ்நாட்டிலும் வழங்க வலியுறுத்தி தமிழக முதல்வருக்கு அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நடைப்பெற்றது.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வட்டம் ஆலங்குளத்தில் , ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்கம் சார்பில் பொங்கல் பண்டிகைக்கு ரூ. 5000 கேட்டு தமிழக முதல்வருக்கு பதிவு தபால் அனுப்பும் போராட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் நடராஜன் தலைமை வகித்தார். ஜெயபிரகாஷ், சந்தானமாரியப்பன், பொன்னம்மாள், கல்யாணி உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தலைமை தபால் நிலையம் முன்பு ஏ.ஐ.டி.யூ.சி கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக, மாவட்ட செயலாளர் ராமன் தலைமையில் தபால் அனுப்பும் போராட்டம் நடைபெற்றது. இதில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கூலி தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

**தர்மபுரி:** தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம் தபால் அலுவலகம் முன்பு நடந்த போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஏ.சி.மணி தலைமை வகித்தார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி,இந்தியக் கம்யூனிஸ்ட் மாவட்ட துணை செயலாளர் எம்.மாதேஸ்வரன்,நிர்வாகி முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அதேபோல் ஏரியூர்,பாப்பாரப்பட்டி,அரூர்,தருமபுரி உள்ளிட்ட 5 மையங்களில் 60 கிளை செயலாளர்கள் மனு அனுப்பும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

**மதுரை:** மதுரையில் நடைபெற்ற போராட்டத்தில் செயலாளர் பாலமுருகன், எஸ்.சேகர், ஏ.பாஷா, கே.முருகன், சுரேஷ் உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும்!

## மாதர் சம்மேளன மாநாட்டில் தீர்மானம்!

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய மாநாடு, ஆர்.சாரதா தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆர்.பாலாமணி வரவேற்புரை நல்கினார். செல்வி துவக்க உரை நிகழ்த்தினார். மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில செயலாளர் ஜே.கண்ணகி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் வகிதா நிஜாம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநாட்டில்பெண்களுக்கான33சதம்இட ஒதுக்கீட்டை நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றிவிட்டு, அது தற்போது அமலாகாது என்பது சரியல்ல. எனவே, அந்த சட்டத்தை உடனடியாக அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். கிராமப்புற ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் வீடற்றவர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும். பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் அத்திக்கடவு இரண்டாவது குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இது 15 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படுகிறது. இதனால் மக்கள் பெரிதும் அவதியுற்று வருகின்றனர். எனவே, குடிநீர் தட்டுப்பாட்டை போக்கும் வகையில் கூடுதலாக குடிநீர் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், இந்திய மாதர் தேசிய சம்மேளத்தின் மாவட்ட தலைவர் ஜே.கலா, மாவட்ட செயலாளர் எம்.பேபி, கிருத்திகா அப்புசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய தலைவராக பாலாமணி, துணைத் தலைவர்களாக செல்வி, பவளக்கொடி, செயலாளராக சாரதா, துணை செயலாளராக விமலா, கவிதா, பொருளாளராக கிருத்திகா, அப்புசாமி ஆகியோர் ஏக மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

### ஒரு லட்சம் தேர்தல் நிதி!

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பெரிய நாயக்கன்பாளையம் ஒன்றிய குழு சார்பில், தேர்தல் நிதி முதல்கட்டமாக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட்டது.

ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி வழங்க, அதை கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் மற்றும் ஏஐடியூசியின் தேசிய செயலாளர் வகிதா நிஜாம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.






### அகில இந்திய கிராமிய அஞ்சல் ஊழியர் சங்கம்

# காலவரையற்ற வேலை நிறுத்தம்



கள்ளக்குறிச்சி மாவட்டம் காந்தி சாலையில் கள்ளக்குறிச்சி தலைமை அஞ்சலகத்தில் ஏ. துரை கோட்டத் தலைவர் தலைமையில் ஜிடிஎஸ் ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை வலியுறுத்தி காலவரையற்ற வேலை நிறுத்தம் நடைபெற்றது.

நாடு தழுவிய இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் 12, 24, 36 மூன்று கட்ட பதவி உயர்வு வழங்கிடு, ஜிடிஎஸ் ஊழியர்களுக்கு இலாகா அந்தஸ்து வழங்கிடு,180 நாட்கள் விடுப்பை சேமித்து பணி நிறைவின்போது பணமாக வழங்கிடு, பணிக்கொடை குரூப் இன்சூரன்ஸ் ரூபாய் 5 லட்சம் வழங்கிடு, ஐபிபிபி போன்ற தனியார் சேவையை இன்சென்டிவ் தவிர்த்து வேலை கணக்கில் சேர்த்து விடு, கமலேஷ் சந்திரா கமிட்டியின் சாதகமான அனைத்து பரிந்துரைகளையும் உடனே வழங்கி விடு, கிளை அஞ்சலகங்களுக்கு லேப்டாப், பிரிண்டர், இணையதள வசதி வழங்கிடு, இலக்காவை தனியாரிடம் ஒப்படைக்கும் போக்கை நிறுத்தி விடு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டி. விஷ்ணு விஜயன் கோட்டச் செயலாளர் பேசினார். இறுதியில் எம். ஏழுமலை கோட்டப் பொருளாளர் நன்றியுரை கூறினார்.

# அரியலூர் கிருஷ்ணமூர்த்தி 25வது நினைவு தினம்

அரியலூர் மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கால அடையாளமாக திகழ்ந்த ஏ.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 25வது நினைவு தினமான அரியலூர் கட்சி அலுவலகத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் த.தண்டபாணி, நகர கிளை ந. கோவிந்தசாமி, பெ. பார்த்திபன், ராஜேந்திரன், சுரேஷ், க. பழனிசாமி, ரெங்கராஜன் உட்பட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# போக்குவரத்து கழக காலியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புக



மணப்பாறை அரசு போக்குவரத்து கழக கிளை வளாகம் முன்பு, அணைத்து தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு மற்றும் ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் சங்க கூட்டமைப்பு இணைந்து வேலை நிறுத்த விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் நடைபெற்றது.

இவ் இயக்கதிற்கு ஏஐடியூசி சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். ஏஐடியூசி திருச்சி மண்டல பொதுச்செயலாளர் சுந்தர்ராஜ், சிஐடியூ துணைச் செயலாளர் முருகேசன், ஐஎன்டியூசி சங்கத்தின் தலைவர்கள் ராஜேந்திரன், முகமது ஆசாத், ஓய்வு பெற்ற சங்க கூட்டமைப்பு தலைவர்கள் சேகர், குமரசங்கு ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மணப்பாறை கிளை மேலாளரிடம் வேலை நிறுத்த கோரிக்கை நோட்டீஸை கொடுத்தனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 144. அறிவும் அருமையும்

**அறிவுடையோர் ஆதல் அருமையன்று தூக்கி**
**துருவிப்பார் சூழ்ந்து வரும்**

எந்தச் செயலையும், சீர்தூக்கிப்பார்த்துச் சிந்தித்தால், அறிவாளியாவது கடினமல்ல சூழல் அறிவாளியாக்கும்.

**எல்லார்க்கும் எங்கும் எளிதில் கிடைப்பது**
**நல்லுலகில் நாடின் அறிவு**

உலக இயலை அணுகித் தேடினால் எல்லா மக்களுக்கும், வேற்றுமையின்றி நல்லறிவு கிடைக்கும் (கல்வியை எல்லாரும் அடைய இயலும் என்பது)

## கலை இலக்கியப் பூங்கா

### "அன்பிலதனை அறம்" கலைப்பயண குழுவிற்கு தமிழகம் முழுவதும் வரவேற்பு

இந்திய மக்கள் நாடக மன்றம் (மிறிஜிகி) வின் அனைத்திந்திய கலைப்பயணம் செப்டம்பர் 27 பகத்சிங் பிறந்த நாளில் தொடங்கி அனைத்து மாநிலங்களிலும் நடைபெற்று வருகிறது.

"DhaiAakharPrem" என்ற பதாகையின் கீழ் வெறுப்பு அரசியலுக்கு எதிராகவும், மதநல்லிணக்கத்தை மக்கள் ஒற்றுமையை முன்னெடுத்தும், ஏழை எளிய உழைக்கும் மக்களை, அடித்தட்டு மக்களை மதத்தின் பெயராலும், சாதியின் பேராலும், இனத்தின் பேராலும் பலவிதமான அடையாளங்களின் பெயரால் பிளவு படுத்தி பகைமை தூண்டி வெறுப்பு அரசியலை வளர்க்கும், போக்கிற்கு முடிவு கட்ட, அகில இந்திய அளவில் மக்கள் மத்தியில் பிரச்சார இயக்கமாக இக்கலை பயணம் மேற்கொள்ளப் படுகின்றது.

**சென்னை:**

"என்பிலதனை வெயில் போல் காயுமே
அன்பிலதனை அறம்"

என்ற திருக்குறளின் ஈற்றடியை பதாகையாக ஏந்தி முற்போக்காளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் படைப்பாளிகள் முன்னெடுக்கும் இப்பயணம் தமிழ்நாட்டில் டிசம்பர் 13 ஆம் தேதி காலையில் வடசென்னையில் வள்ளல் ராமலிங்க அடிகள் வாழ்ந்த வீட்டில் தொடங்கியது.

வள்ளலார் இல்லத்தின் அருகே அமைந்த மேடையில் இசையறிஞர் டி. எம். கிருஷ்ணாவின் மாணவர்கள், வள்ளலாரின் அருட்பாக்களை பாடி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். இப்டா அகில இந்திய தலைவர் பிரசன்னா ஹெக்கோடு மற்றும் ஆதவன் தீட்சண்யா, பொதுச் செயலாளர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் ஆகியோரை வரவேற்று நினைவு பரிசும், பதக்கங்களும் அணிவிக்கப்பட்டது.

சமத்துவ கருத்துக்களைக் கொண்ட ராப் இசை பாடல்களை இளைஞர்கள் பாடினர். மக்கள் அதிகாரம் கோவன் பாசிசத்தை தோலுரிக்கும் பாடல்களை பாடினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பேராசிரியர் முனைவர் நல்லூர் சா. சரவணன் பேரா வீ. அரசு, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற பொதுச் செயலாளர் மருத்துவர் த. அறம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியை வடசென்னை தமிழ் சங்கம் இளங்கோ, பா. மனோகரன் சிறப்பாக ஏற்பாடு செய்து ஒருங்கிணைப்பு செய்தனர்.

◆ தொடக்க நிகழ்ச்சிக்கு பின்பு கேசினோ தியேட்டர் தொடங்கி சித்ரா தியேட்டர் வரை பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் பறை யிசை முழங்க கலைப்பயணம் மேற்கொண்டனர்.

கும்ப கரகத்தில் வள்ளலார், குணங்குடி மஸ்தான்சாகிபு, பாரதியார், வ. உ. சிதம்பரனார், திரு.வி.க , சிங்காரவேலர் , பெரியார், இரட்டைமலை சீனிவாசன், எம். சி. ராஜா, பம்மல் சம்பந்தனார், பகத்சிங், அம்பேத்கர் முதலியோரின் திருவுருவப் படங்களை தலையில் சுமந்து ஆடி வந்தனர்.

திராவிடர் விடுதலை கழகம் தபசி குமரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. இதில் திராவிடர் கழகம் பிரின்ஸ் பெரியார் சிறப்புரை நிகழ்த்தினார். கானா விமலா பாடல்களை சிறப்பாக பாடினார்.

நிகழ்ச்சியை டி. எஸ். நடராஜன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற துணை தலைவர், கவின்மலர், அசோக்சிங், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

◆ இலயோலா கல்லூரியில் வரவேற்பு நிகழ்ச்சி தக்கர்பாபா நினைவு வித்யாலயா மாணவிகளின் சர்வ சமய பிரார்த்தனையுடன் தொடங்கின.

ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் ஆ.பாஸ்கர் நோக்கவுரை நிகழ்த்தினார். மத நல்லிணக்கப் பாடலை செல்வி ஹர்ஷிதா இசைத்தார். இலயோலா கல்லூரி விஸ்காம் துறையின் தலைவர் அருட்தந்தை எஸ். ஜே. ஜஸ்டின் பிரபு தலைமை உரை நிகழ்த்தினார். ஆற்காடு இளவரசரின் திவான் நவாப் ஜாதாமுகமது ஆசிஃப் கலை நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

செங்கல்பட்டு ஜீவன் கலைக்குழுவினரின் "பகத்சிங்" நாடகம் நடைபெற்றது. பெரியாராக ஓவியக்கவி வீரமணி, சுதந்திரப் போராட்ட வீரராக கவி ஆ.கிருட்டிணன் ஆகியோர் நடித்தனர்.

கல்லூரியின் கலை இலக்கியத்துறை பேராசிரியர் காளீஸ்வரன் நன்றி நவில நிகழ்வுகள் நிறைவுற்றன.

மரு.ஏ.ஆர். சாந்தி, ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர் பேரா. கணபதி இளங்கோ ஆகியோர் நிகழ்வைத் தொகுத்து வழங்கினர்.

முன்னதாக ஓவியர்கள் சரத் மற்றும் டி.பி.ஜெயராமன் வரைந்த மத நல்லிணக்க ஓவியக் கண்காட்சி நடைபெற்றது.

**கோவை:**

கோவை வடவள்ளி பேருந்து நிலையமருகே. கலைஞர்களின் பறையிசை, பாடல்கள், நாடகங்கள் என எழுச்சியூட்டும் நிகழ்ச்சிகள் மக்களைக் கவர்ந்தன. காந்திபுரம் பெரியார் படிப்பகத்திலிருந்து, சேர்ந்திசைப் பாடலுடன் கலைப்பேரணி துவங்கியது.

வடகோவை குஜராத்தி சமாஜம் ரெய்ச்சூரா அரங்கில் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. அன்பிலதனை அறம் குழு, கோவை நிகர் குழு ஆகியோரின் பறையிசை அரங்கத்தை அதிர வைத்தன. அடுத்து, குழுவினரின் ராப் மற்றும் மக்களிசைப் பாடல்களால் பல தோழர்கள் நடனமாடி கலகலப்பூட்டினர். பேரா.த.திலிப்குமார் இயக்கத்தில் அமரர் கோமகனின் "காந்தி பொம்மைகள்" நாடகம், கவிஞர் சுகிர்தராணியின் கவிதை, "வள்ளலார்", தியாகி கே.பி.ஜானகியம்மாள் வரலாறைக் காட்சிப்படுத்திய "அம்மா" ஆகிய நாடகங்கள் நடைபெற்றன. நாடக இயக்குனர் பிரளயன், நாடகவியலாளர் மங்கை ஆகியோரின் நெறியாள்கை பாராட்டுகளைப் பெற்றது.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாவட்டச்செயலாளர் சி. பத்மநாபன், அன்பிலதனை அறம் குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள் ப.பா. ரமணி, யு.கே.சிவஞானம், ச.பாலமுருகன், தமுஎகச மாவட்டத் தலைவர் தி.மணி, இஸ்கஃப் மாநிலப் பொதுச்செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், மற்றும் ஒருங்கிணைப்புக்குழுவில் இணைந்துள்ள பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்று சிறப்பித்தனர். கேரள மாநில இப்டா பிரதிநிதி பிரசாந்த் வாழ்த்துரை வழங்கினார்.

**ஈரோடு:** இக்குழுவினர் டிசம்பர் 14 ந்தேதி ஈரோடு வந்தனர். இவர்களுக்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம், திராவிடர் கழகம், தமிழ்நாடு மக்கள் உரிமைப்பேரவை, திராவிடர் விடுதலைக்கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகளின் சார்பில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது.

தந்தை பெரியார் நினைவு இல்லத்தின் முன் அளிக்கப்பட்ட வரவேற்பில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைர்ஞர்கள் சங்கத்தின் மாவட்டத்தலைவர் சங்கரன் வரவேற்றுப்பேசினார். பாண்டிச்சேரி உமா தந்தை பெரியாரைப் பற்றி பாடினார்.

கிருஷ்ணா திரையரங்கு அரங்கின் அருகில் நடந்த நிகழ்விற்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற ஈரோடு மாவட்ட தலைவர் மு.வரதராஜன் வரவேற்றுப்பேசினார். முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், மக்கள் உரிமைப் பேரவை செயலாளர் கண.குறிஞ்சி ஆகியோர் வாழ்த்திப்பேசினார்கள். காம்ரேட் டாக்கீஸ் தோழர்களின் பறை யிசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் நடந்த நிகழ்வுக்கு திராவிடர் கழக த.சண்முகம் வரவேற்புரையாற்றினார். சுகிர்தராணி உரைநிகழ்த்தி பாட்டும் பாடினார்.

இந்த நிகழ்வுகளில் திரைப்பட கலைஞர் ரோகிணி, எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா, கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஓடை.பொ.துரையரசன், சிவகிரி கிளைத்தலைவர் சி.ஆறுமுகம், தங்கராஜ் (அமைப்பாளர்), இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தெற்கு மாவட்ட செயலாளர் த. பிரபாகரன், பழங்குடி மக்கள் சங்க செயற்பாட்டாளர் வி.பி.குணசேகரன், ப.வெ.பாலதண்டாயுதம், ந.இரமணி, சி.எம்.துளசிமணி, கந்தசாமி மற்றும் பலர் பங்கேற்றனர். நிகழ்ச்சியை பிரளயன் ஒருங்கிணைத்தார்.

**திருப்பூர்:** பயணக் குழுவை திருப்பூர் புதிய பஸ் நிலையத்தில் பயனாடை அணிவித்து,பறை இசை, ஒயிலாட்டத்தோடு வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் மாநகர் மேயர் நா.தினேஷ்குமார், துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பறை இசை முழங்க ஊர்வலமாக அழைத்து வந்தனர். பி.ஆர்.நடராசன் வரவேற்பு உரையை நிகழ்த்தினார். தலைமை உரையை ஆர்.ஈஸ்வரன் நிகழ்த்தினார். சிறப்புரையை ஆதவன் தீட்சண்யா வழங்கினார்.

கலைநிகழ்ச்சியின் முதல் நிகழ்வாக நிமிர்வு பறை இசையின் நிகழ்வு நடத்தப்பட்டது. சென்னை பாப் இசைக்குழுவினர் பாப் இசைப் பாடலைப் பாடினார்கள். மக்கள் இசைப்பாடல்களை மு.துருவன்பாலா, து.சோ. பிரபாகர், சித்தன், காங்கயம், புஇமு தோழர்கள் பாடினார்கள்.

சிவகங்கை, பாரதிக்கலைக் குழுவின் தப்பாட்டம், ஒயிலாட்டம், கட்டைக்கால்ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் என மேடை களைகட்டியது. சென்னைக் கலைக்குழுவினர்கள் இரு நாடகங்களை நடத்தினார்கள். வள்ளலார் நாடகம். அம்மா என்ற கே.பி.ஜானகியம்மாள் வாழ்க்கை வரலாற்று நாடகம் என இரு நாடகங்களை நடத்தினார்கள். நாடகத்தில் திரைக்கலைஞர் ரோகிணி பங்கேற்று தன் இயல்பான நடிப்பை வெளிப்படுத்தினார்.

பாரதிசுப்பராயன் தொகுத்து வழங்கினார். நன்றி கூறி முகில்ராசு நிகழ்வை நிறைவு செய்தார்.




### தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கிளைக் கூட்டம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், காரைக்குடி கிளைக் கூட்டம் காரைக்குடியில் ஆசிரியர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கல்வி அலுவலர் த.தனுசுகோடி முன்னிலை ஏற்றார். மன்ற வாழ்த்துப் பாவை முனைவர் முருகேசுவரி பாட, கிளைத் தலைவர் முதுமுனைவர் ரெ.சந்திரமோகன் வரவேற்புரையுடன், அகரமுதலி தமிழியக்கம் சார்பில் 'தூய தமிழ்ப் பற்றாளர்' விருது பெற்ற பா.ஆனந்தி அம்மா, தமிழக அரசு வழங்கும் 'கனவு ஆசிரியர்' விருது பெற்ற முனைவர் முருகேசுவரி ஆகிய இருவரையும் பாராட்டி நூல்களும் வழங்கப்பட்டன. இருவரும் ஏற்புரை நிகழ்த்தினர்.

'திரைத்துறை சில பதிவுகள்' எனும் தலைப்பில் வழக்கறிஞர் சத்தியமூர்த்தி உரையாற்றினார்.

ஆசிரியர் பழனி கவிஞர்கள் கீட்ஸ், பைரன், எலியட் பற்றிய அறிமுகவுரை ஆற்றினார். முனைவர் முருகேசுவரி, முனைவர் சுப. காளிமுத்து கவிஞர் கார்மேக செல்வராசன், கவிஞர் பொ. முத்துராக்கு, சந்திரமோகன், நீதி ஆகியோர் பாடல்களை பாடினர் .

இரா.பூபதியும் மா.நீதியும் 'வேலை' எனும் நிச நாடகத்தை நிகழ்த்தினர். எம்ஆர்டி இராசேந்திரன் கூட்ட மதிப்புரையையும் முத்துகிருஷ்ணன் நகைச்சுவை உணர்வின் அவசியத்தையும் எடுத்துரைத்தனர்.




### பாரதியார் பிறந்தநாள் விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தஞ்சை மாநகரக்கிளை ஒருங்கிணைத்த மகாகவி பாரதியார் பிறந்தநாள் விழா பெசண்ட் அரங்கில், தஞ்சை மாவட்ட கௌரவத்தலைவர் மருத்துவர் பா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இன்னிசையோடும், கல்லூரி மாணவி, எம்.ஐஸ்வர்யாவின் பாரதி பாடலோடும் தொடங்கியது.

மருதுபாண்டியர் கலைக்கல்லூரி மாணவிகளின் பறையும் கரகமும் கோர்த்த கிராமிய ஆட்டம் பார்ப்போரை வியப்பில் ஆழ்த்தியது.

ஏழாம் வகுப்பு மாணவர் "எஸ். மித்ரன்" பாரதியின் பாடலை பாடினார். அரசியல் கவிதையை "கவிஞர் குமார்" வாசித்தார்.

பெருமன்றத்தின் தஞ்சை மாவட்டச் செயலாளர் முனைவர் "அய்யாறு ச.புகழேந்தி" வாழ்த்திப் பேசினார்.

தஞ்சை மாநகராட்சியின் துணைமேயர், திமுகவின் மாநில மருத்துவரணி துணைச்செயலாளர் அஞ்சுகம் பூபதி நிகழ்விற்கு தலைமையேற்று, மாணவர்களுக்கு பயனாடையும் புத்தகமும் வழங்கினார்.

மாநகரக்கிளைத் தலைவர் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி, அஞ்சுகம் பூபதி அவர்களுக்கு பயனாடை அணிவித்து புத்தகங்கள் வழங்கி சிறப்பு செய்தார்.

# நிர்மலா சீதாராமன் கருத்துக்களுக்கு சிபிஐ கண்டனம்

நிர்மலா சீதாராமன் கருத்துக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கண்டித்துள்ளார்.

பாஜக ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் “இண்டியா” கூட்டணி உருவாக்கி வரும் அரசியல் பேரலைகளை கண்டு அரண்டு போய் பிதற்றி வருகிறார்.

வடகிழக்கு பருவமழை காலங்களில், வங்கக்கடலில் காற்றழுத்த மண்டலத்தால் உருவாகும் இயற்கை சீற்றம் குறித்தும், அதனை எதிர்கொள்ளும் பாதுகாப்பு மற்றும் தடுப்பு ஏற்பாடுகள் செய்திருந்த, தமிழ்நாடு அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பேரழிவின் விளைவுகளை பெருமளவு கட்டுப்படுத்தி குறைத்தது என்பதை நிர்மலா சீத்தாராமன் மூடி மறைக்கிறார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வர்தா புயல் இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட பேரிடர் இழப்புகளில் கற்றுக் கொண்ட படிப்பினை அடிப்படையில் உடனடி திட்டங்கள், தொலை நோக்கு நிரந்தர திட்டங்கள் என்ற முறையில் விரிவான பாதுகாப்புத் திட்டங்கள் ஒரு லட்சத்துத்து, 27 ஆயிரத்து 692 கோடி மதிப்பில் தயாரித்து அதற்கான நிதியை வழங்குமாறு தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசிடம் கேட்டுக் கொண்டது. ஆனால், ஒன்றிய அரசு வெறும் 4.61 சதவீத நிதி மட்டுமே வழங்கி தமிழக மக்களை வஞ்சித்து விட்டது.


தற்போது ஏற்பட்டிருக்கும் பேரிடர் இழப்புகளை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் நிதியுதவி கோரியுள்ள நிலையில், ஒன்றிய அரசின் வன்மம் மேலும் தொடரும் என்பதையே நிதி அமைச்சர் வெளிப்படுத்துகிறார்.

தென் மாவட்டங்களுக்கு ஏற்படும் பெருமழை ஆபத்து டிசம்பர் 12 ஆம் தேதியே அம்மையார் அறிந்தது உண்மை எனில், முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் செய்தியை ஏழு நாள் கழித்து, ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவது ஏன்?

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை பெருநகர் உட்பட ஒன்பது மாவட்டங்கள் இயற்கை சீற்றத்தால் நிலைகுலைந்து கிடக்கும் நிலையில், தமிழ்நாடு அரசு மன்றாடிக் கேட்ட பேரிடர் நிவாரண நிதியை வழங்க கவனம் செலுத்தாத ஒன்றிய நிதி அமைச்சர், வழக்கமாக வழங்கப்படும் பேரிடர் நிதி தவிர, தற்போது ஏற்பட்டிருக்கும் பேரிடரை எதிர் கொள்ள, தமிழ்நாடு கோரியுள்ள கூடுதல் நிதி இல்லை என கை விரித்து நிற்பதற்கு நிதியமைச்சர் வெட்கப்பட வேண்டும்.

அதானி, அம்பானி போன்ற பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பல லட்சம் கோடி மக்கள் வரிப்பணத்தை அள்ளி, அள்ளித் தரும் பாஜக ஒன்றிய அரசு, மாற்றுக் கருத்தும் கொள்கையும் கொண்ட மாநில அரசுகளுக்கு எதிராக ஆளுநர் மாளிகைகளும், அரசியலமைப்பு நிறுவனங்களும் ஏவி விடப்பட்டிருப்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த வரிசையில் தேசிய பேரிடர் மீட்புக் குழுக்களையும் சேர்த்துக் கொண்டார்களா?

அடர்த்தியான அரசியல் மற்றும் அரசுப் பணிகளுக்கு மத்தியில் முதலமைச்சர், பிரதமரை சந்தித்து முறையிட நேரம் கேட்டபோது, மாற்றி, மாற்றி கூறிய போதும் நள்ளிரவு வரை



காத்திருந்து, பிரதமரிடம் விரிவாக எடுத்துக் கூறியதை.நிதியமைச்சர் அறிந்து கொள்ளாதது ஏன்?

நாடாளுமன்ற பாதுகாப்பில் ஏற்பட்ட படுதோல்வி, இதற்காக நியாயமும் விளக்கமும் கேட்ட 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்த ஜனநாயக படுகொலை, மாநில உரிமைகளை பறித்து, மையத்தில் குவிக்கும் அதிகார வெறி என எதேச்சதிகார ஒன்றிய அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழும் சூழலில், “இண்டியா” கூட்டணி கண்டு நிதியமைச்சர் ஆத்திரமடைந்து தமிழ்நாடு முதலமைச்சர் மீது ஆசிட் வார்த்தைகளை அள்ளி வீசுகிறார்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வெள்ளம் வடியாத நிலையில், தென் மாவட்டங்களில் பெரு மழையால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் விளைந்த நிலையில் நீரில் மூழ்கியும். வாழைகள், பயிறு வகைகள், சிறு கிழங்குகள் உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்து விட்டன. நூற்றுக்கணக்கான கால் நடைகள் மழை வெள்ளத்தால், அடித்துச் செல்லப்பட்டுள்ளது. ஏரிகள், குளங்கள், கண்மாய்களில் ஏற்பட்ட உடைப்புகள், சாலைகள் துண்டிப்பு என வரலாறு காணாத சேதாரத்தை சீர்படுத்தி வரும் நேரத்தில், அதற்கு தேவையான பேரிடர் கால நிதியுதவி செய்து உதவும் மனிதாபிமானம் எள் அளவும் இல்லாமல், ஊடகங்கள் வழியாக மலிவான அரசியல் ஆதாயம் தேடும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக் கண்டிக்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மிக்ஜம் புயல் நிவாரணம் ஒன்றிய அரசு முதல்வரின் கோரிக்கையை முழுமையாக ஏற்க வேண்டும்

மிக்ஜம் புயல் நிவாரணம் ஒன்றிய அரசு முதல்வரின் கோரிக்கையை முழுமையாக ஏற்க வேண்டும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை பெருமாநகர், அதன் சுற்றுவட்டார புறநகர் மாவட்டங்கள் மிக்ஜம் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்த இயற்கை பேரிடர் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசின் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆலோசகர் தலைமையில் மத்தியக் குழு இரண்டு நாள் ஆய்வு செய்து, முதலமைச்சரை சந்தித்து பேசியுள்ளது.

மிக்ஜம் புயல் எச்சரிக்கையை தொடர்ந்து தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொண்டு வரும் மீட்டுருவாக்கப் பணிகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மத்தியக் குழுவிற்கு தெரிவித்த முதலமைச்சர் உடனடியாக 7 ஆயிரத்து 33 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக ரூ.12 ஆயிரத்து 659 கோடியும் ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று மத்தியக் குழு மூலம் கோரியுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கஜா புயல் பேரிடர் பாதிப்புக்கு தமிழ்நாடு அரசு கோரிய நிவாரணத் தொகையில் 10 சதவீதத்துக்கும் குறைவான தொகை மட்டுமே ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. இதுபோல் கடந்த பத்தாண்டு காலத்தில் ஏற்பட்ட தொடர் பேரிடர் பாதிப்புகளுக்கு ஒவ்வொரு முறையும் தமிழ்நாடு அரசு கோரிய நிவாரணத் தொகையை வழங்காமல் பாஜக ஒன்றிய அரசு தொடர்ந்து மிகக் குறைந்த நிதி மட்டுமே வழங்கியுள்ளது. இதுபோல் இப்போதும் தமிழ்நாட்டு மக்களை வஞ் சித்து விடாமல் தமிழ்நாடு முதலமைச்சர் கோரியுள்ள பேரிடர் நிவாரணத் தொகையை முழுமையாக வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

16 ஆம் பக்க தொடர்ச்சி

முழுமையாகப் பொறுப்பேற்று உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும். ஆறு, கடலில் பரவிவரும் எண்ணெய் கழிவுகளை நவீன தொழில்நுட்பத்தின் மூலம் அகற்றி தூய்மைப்படுத்த வேண்டும். சதுப்பு நிலங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரிசெய்யும் பணிகளைத் தொடங்க வேண்டும்” என்றும் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தினார்.

முன்னதாக, எண்ணெய் கழிவுகள் வெளியேறி பெரும்பாதிப்புக்கு உள்ளான பகுதிகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக டிசம்பர் 9ஆம் தேதி மேற்குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிட்டு மாவட்ட நிர்வாகிகள் அறிக்கை வெளியிட்டனர். இதனைத் தொடர்ந்து எண்ணெய் கழிவுகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட கொற்றலை ஆற்று முகத்துவாரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, எம்.எஸ்.மூர்த்தி உள்ளிட்டோர் டிசம்பர் 19ஆம் தேதி பார்வையிட்டனர்.

– மணி











JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 30.12.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# ஒன்றிய அரசின் சி.பி.சி.எல். நிறுவன எண்ணெய் கழிவுகளால் பேரழிவு!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம்

**ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனமான சென்னை பெட்ரோலியம் கார்பரேஷனில் (சி.பி.சி.எல்.) இருந்து வெளியேறிய எண்ணெய் கழிவுகளால் ஆறு, கடல், மீன்வளம், இயற்கை சூழல், மீனவர்களின் வாழ்வாதாரம் உள்ளிட்டவை பேரழிவுக்கு உள்ளாயின.**




சி.பி.சி.எல். நிறுவனத்தில் இருந்து எண்ணூர் கடற்கழி (க்ரீச்) வரையில் உள்ள 11 கி.மீ. மட்டுமல்லாமல், தெற்கில் காசிமேடு மீன்பிடித் துறைமுகம், வடக்கில் பழவேற்காடு கடற்கழி, ஆயிரக்கணக்கான புலம்பெயார் பறவைகளின் பல்லுயிர் பெருக்க மையமான பழவேற்காடு ஏரி என எண்ணெய்க் கழிவுகள் மின்னல் வேகத்தில் பரவியது. தண்டையார் பேட்டையின் சில பகுதிகளிலும், தங்கள் வீடுகளில் எண்ணெய்க் கழிவு படிந்துள்ளதாக மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

எண்ணெய் கழிவுகள் வெளியேறியதைக் கண்டித்து டிசம்பர் 25 அன்று சி.பி.சி.எல். நிறுவனத்தின் நுழைவாயில் முன்பு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி தலைமை தாங்கினார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டன உரையாற்றினார். முன்னாள் மாவட்ட செயலாளர்எம்.எஸ்.மூர்த்தி மற்றும்கீ.சு.குமார், எம்.ஜெய்சங்கர் உள்ளிட்டோரும் உரையாற்றினர்.

சி.பி.சி.எல். எண்ணெய் கழிவுகளை நவீன உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அகற்றுவதுடன், மாசடைந்த தண்ணீரை சீராக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் உடமைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். கொற்றலை ஆறு, பக்கிங்காம் கால்வாய் ஒட்டிய பகுதிகளை சீர்படுத்தி தடுப்பு சுவர்கள் உடனே அமைக்க வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சனைகள் மீது விரிவான ஆய்வு செய்து நீண்ட கால விளைவுகளை கணக்கில் கொண்டு சுகாதார கண்காணிப்பு, பொருளாதார ரீதியான இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றிய மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், “இவ்வளவு பெரிய பேரிடருக்கு பொறுப்பேற்க வேண்டிய சி.பி.சி.எல். நிர்வாகம் அமைதி காப்பதாக குற்றம்சாட்டினார். “டிசம்பர் 3, 4 தேதிகளில் புயல், மழையால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிபிசிஎல் எனப்படும் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகளால், எண்ணூர் குப்பம், எண்ணூர் முகத்துவார குப்பம், நெட்டுக்குப்பம், தாழாங்குப்பம், காட்டுகுப்பம், சிவன்படை குப்பம், சின்ன குப்பம், பெரிய குப்பம் ஆகிய எட்டு மீனவ கிராமங்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளன.

**எண்ணெய் கழிவால் ஏற்பட்ட பேரழிவை கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் சென்னை நடைபாதை தெருசுமை மீன் வியாபாரிகள் சங்கத்தினரும் பங்கேற்றனர். மீன்பிடித் தடை காலத்தில் மீனவர்களுக்கு நிதியுதவி வழங்குவது போன்று தமிழ்நாடு அரசு தங்களுக்கும் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை மனுவை மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்களிடம் வழங்கினர்.**

மீனவர்களின் வலைகள், படகுகள், அவர்களுடைய வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எண்ணெய் கசிவால் மீன்கள், நண்டுகள், இறால்கள் செத்துவிட்டன. இன்னும் ஆறு மாதம் முதல் ஒரு ஆண்டு வரை மீனவர்களால் தொழில் செய்ய முடியாது. எண்ணூரை சுற்றியுள்ள சென்னை மாநகராட்சியின் 3 வார்டுகளில் மக்களுடைய உடமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு தற்காலிக நிவாரணம் அறிவித்துள்ளது. இவ்வளவு பெரிய பேரிடருக்கு பொறுப்பேற்க வேண்டிய சிபிசிஎல் நிர்வாகம் அமைதி காக்கிறது.

பல ஆண்டுகளாக சிறுசிறு நிகழ்வுகளாக எண்ணெய் கசிவு தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே சிபிசிஎல் நிர்வாகம் பேரிழப்பு

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

## மகராஷ்டிராவில் ஏஐடியுசி எழுச்சிப் பேரணி




நவம்பர் 20 கோலாப்பூரில் இருந்து தொடங்கிய எழுச்சிமிகு ஏஐடியுசியின் பிரச்சாரப் பயணம் டிசம்பர் 18ல் மாபெரும் பேரணியோடு நினைவடைந்தது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **S.Shanmuganathan** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.